Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 190
சனிக்கிழமை 04 ஜூன் 2022
வைகாசி 21 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

## மின் கட்டணங்கள் நள்ளிரவு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 4
புதிய மின்சார திருத்தக் கட்டணம் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப் பட்டுள்ளது என்று பொதுப் 15 ➤

பிரதமரைப் பதவிநீக்க

# ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை

### 21ஆவது திருத்த வரைவில் உள்ளடக்க கட்சித்தலைவர் கூட்டத்தில் இணக்கம்!

**கொழும்பு, ஜூன் 4**

**தனது தேவைக்கேற்பவும், தான் விரும்பிய நேரத்திலும் ஜனாதிபதியால் பிரதமரைப் பதவிநீக்க முடியாது என்ற திருத்தத்தை அரசமைப்பின் 21ஆவது திருத்த வரைவில் உள்ளடக்க, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது.** 15 ➤

## கோத்தாபயவுக்கு பாதுகாப்பு அமைச்சு

### கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஜூன் 4
அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தில் ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளைக் கொண்டிருக்க முடியாது என்று தீர்மானிக்கப்பட்டுள்ள 15 ➤

## ஜனாதிபதியின் அதிகாரம் குறைப்பு கூட்டத்தில் பெரமுன வெளிநடப்பு?

கொழும்பு, ஜூன் 4
அரசமைப்பின் 21ஆவது திருத்த வரைவு தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடைபெற்ற, சர்வ கட்சித் தலை 15 ➤



முச்சந்தி முரளி

"பல எலி சேர்ந்தால் புத்தெடுக்க முடியாது. உவையள் உப்படியே கூட்டத்தை நடத்தியே காலத்தை கடத்தப் போயினம் போல..."

## நீரில் மூழ்கி குழந்தை பலி

### வவுனியாவில் துயரம்

வவுனியா, ஜூன் 4
வவுனியா பூவரசங்குளம் நித்தியநகர் பகுதியில், நீர்த் தொட்டிக்குள் வீழ்ந்து இரண்டரை வயதுக் குழந்தை உயிரிழந்துள்ளது. கி.தாட்சாயினி என்ற பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. 15 ➤

எக்னெலிகொட கடத்தல் வழக்கு

## 9 இராணுவத்தினரும் மீண்டும் மறியலில்!

கொழும்பு, ஜூன் 4
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்திக் காணாமலாக்கப்பட்ட வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டு பிணை வழங்கப்பட்ட சந்தேக நபர்களான 9 இராணுவத்தினரையும் மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 15 ➤

## மன்னாரில் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்!

### 7 பேர் மருத்துவமனையில்

மன்னார், ஜூன் 4
மன்னார் பேசாலையில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற 7 மீனவர்கள் மீது கடற்படையினர் கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் பாதிக்கப்பட்ட 7 மீனவர்கள் மருத்துவ 15 ➤

## ஊர்காவற்றுறையில் 120கிலோ கஞ்சா மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 4
ஊர்காவற்றுறைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 120 கிலோ கஞ்சா நேற்று சிறப்பு அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டது. அதை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 34 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டார்.
கஞ்சா பதுக்கி 15 ➤

கரவெட்டி

## குஞ்சர்கடையில் விபத்து மாணவன் பரிதாபச்சாவு



யாழ்ப்பாணம், ஜூன் 4
கரவெட்டி குஞ்சர்கடைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் செல்வமோகன் வாணுஜன் (வயது- 16) என்ற பாடசாலை மாணவன் உயிரிழந்தான்.
கரணவாய் மேற்கு 15 ➤

## தொலைத்தொடர்பு வரி நேற்றுமுதல் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 4
நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தொலைத் தொடர்பு வரி அதிகரிக்கப்பட்டுள்ளது 15 ➤

செம்மணிப்படுகொலை

## சாட்சியப் பதிவுகளுடன் சிட்னியில் ஆவண நூல்

கான்பெரா, ஜூன் 4
யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தியும் அவரது உறவினர்களும் இராணுவத்தினரால் செம்மணியில் கொல்லப்பட் 15 ➤

தமிழகம் வழங்கிய

## நிவாரணப் பொருள்கள் திங்களன்று விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
தமிழக அரசால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களின் விநியோகம் நாளைமறுதினம் திங்கட் கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.
தமிழக அரசின் உதவிப் பொருள்கள் விநியோகத்தில் அரசியல் தலையீடுகள் இருப்பதாக பிரதமர் அலுவலகத்துக்கு கிடைத்த முறைப்பாடுகளையடுத்து நேற்றுமுன்தினம் தொடக்கம் விநியோகம் இடைநிறுத்தப்பட்டது. அதனை மீளவும் திங்கட்கிழமையிலிருந்து ஆரம்பிக்குமாறு 15 ➤

கொவிட் நிதியத்திலிருந்து

## மருந்துகள் இறக்குமதிக்காக 1.8 பில்லியன் ரூபா ஒதுக்கீடு!



கொழும்பு, ஜூன் 4
அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக கொவிட் நிதியத்திலிருந்து 1.8 பில்லியன் ரூபாவை விடு 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை தொடர்ந்தும் பரப்புகிறது பொதுபலசேனா

## அமெரிக்காவின் அறிக்கையில் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 4**

**சிங்கள பௌத்தமேலாதிக்கத்தைப் பரப்புவதற்காகவும் மத மற்றும் இன சிறுபான்மையினத்தவர்களை கொச்சைப்படுத்துவதற்காகவும் பொது பலசேனா தொடர்ந்தும் சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.**

2021 இல் சர்வதேச மத சுதந்திரம் குறித்த தனது வருடாந்த அறிக்கையில் அமெரிக்கா இதனை தெரிவித்துள்ளது.

பொதுபல சேனா போன்ற பௌத்த தேசியவாதக் குழுக்களால் வெளிப்படையாக தென்படும் வகையில் முன்னெடுக்கப்படும் சமூக ஊடக பரப்புரைகள் சிறுபான்மை குழுக்களை இலக்குவைத்து வன்முறையை தூண்டுகின்றன என சிவில் சமூக அமைப்புகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினர் இலக்கு வைக்கப்படுகின்றனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர் என அமெரிக்கா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சுவிசேசக்கூட்டணி 2021 இல் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் போதகர்கள் மற்றும் அவர்களின் சபைகள் மீதும் இடம்பெற்ற 77 தாக்குதல்களை பதிவு செய்துள்ளது எனத் தெரிவித்துள்ள அமெரிக்கா வழிபாடுகள் குழப்பப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன எனவும் தெரிவித்துள்ளது.

11 தடவை போதகர்கள் அவர்களின் சபைகள் அவர்களின் குடும்பத்தவர்கள் குழுவினர் தாக்கப்பட்டனர் என இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சுவிசேசக்கூட்டணி தெரிவித்துள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம் அமைப்புகளும் அரசசார்பற்ற அமைப்புகளும் தங்கள் நடவடிக்கைகளை பொலிஸார் கண்காணிப்பதும் துன்புறுத்தல்களும் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளன என அமெரிக்காவின் மத சுதந்திர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தங்களின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்வதற்காக இலங்கையின் பாதுகாப்பு படையினர் தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்கின்றனர் தங்கள் அலுவலகங்களுக்கு வருகை தருகின்றனர் என முஸ்லிம் அமைப்புகள் தெரிவித்தன என அமெரிக்காவின் மத சுதந்திர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

# எரிவாயு பதுக்கல் முறியடிப்பு மக்களுக்குப் பகிர்ந்தளிப்பு



வவுனியா, ஜூன் 4

வவுனியாவில் இரு எரிவாயு விற்பனை நிலையங்களில் மக்களுக்கு வழங்கப்பட்ட எரிவாயுவைப் பதுக்க முற்பட்ட வேளை வர்த்தகர்களுக்கும் மக்களுக்கும் முரண்பாடு ஏற்பட்டது. எனினும் பாவனையாளர் அதிகாரசபையால் எரிவாயு பதுக்கல் முறியடிக்கப்பட்டு மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

வவுனியாவில் நேற்று 5 எரிவாயு விற்பனை நிலையங்களில் எரிவாயு விநியோகம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து குறித்த விநியோக நிலையங்களுக்கு முன்னால் மக்கள் இரவு முதல் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

வவுனியா - பட்டாணிச்சூர் பகுதியில் அமைந்துள்ள எரிவாயு விற்பனை நிலையத்தினர் பூனாவ பகுதிக்குச் சென்று 20 எரிவாயு சிலிண்டர்களை பெற்றனர். எனினும் தமக்கு எரிவாயு வழங்கப்படவில்லை எனக் கூறி நீண்ட வரிசையில் நின்ற மக்களைத் திருப்பி அனுப்ப முற்பட்டனர். இதனால் மக்களுக்கும் குறித்த வர்த்தக நிலையத்தினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது. தகவலறிந்து குறித்த பகுதிக்கு வந்த பிரதேச செயலக அதிகாரிகள், நெளுக்குளம் பொலிஸார், எரிவாயுவை மக்களுக்கு வழங்குமாறு தெரிவித்தனர். எனினும் விநியோகஸ்தர் தாம் ஏற்கனவே பதிவு செய்த நபர்களுக்குத் தான் எரிவாயுவை வழங்க முடியும் எனக் கூறினார். இதனையடுத்து வருகை தந்த பாவனையாளர் அதிகார சபையினர், எரிவாயுவை பதுக்க முடியாது. பூனாவ பகுதியில் இருந்து பெறப்பட்ட எரிவாயுவை வரிசையில் உள்ள மக்களுக்கு வழங்க வேண்டும் என அறிவுறுத்தியதுடன், எரிவாயுவை வழங்காவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வலியுறுத்தினர். இதனால் வர்த்தக நிலைய உரிமையாளருக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இருப்பினும் பாவனையாளர் அதிகார சபையினரின் அறிவுறுத்தலுக்கு அமைய 20 சிலிண்டர்களில் வர்த்தக நிலைய உரிமையாளருக்கு ஒன்று வழங்கப்பட்டதுடன் ஏனைய 19 சிலிண்டர்களும் நீண்ட வரிசையில் நின்ற 19 பேருக்கு வழங்கப்பட்டன.

இதேவேளை வவுனியா - வேப்பங்குளம் பகுதியில் உள்ள எரிவாயு விற்பனை நிலையத்துக்கு வந்த 20 சிலிண்டர்களை, தமது வாடிக்கையாளருக்கு வழங்கப் போவதாக தெரிவித்து வர்த்தகர் ஒருவர் பிறிதொரு வீட்டில் எரிவாயுவை இறக்கியுள்ளார். இதனால் அங்கும் காத்திருந்த மக்களுக்கும் வர்த்தக நிலைய உரிமையாளருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இதனையடுத்து குறித்த நிலையத்துக்குச் சென்ற பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார் ஆகியோர் வர்த்தக நிலைய உரிமையாளருடன் கலந்துரையாடி அங்கு நின்ற 15 பேருக்கும், ஏற்கனவே வர்த்தக நிலையத்தில் பதிவு செய்த வாடிக்கையாளர் 5 பேருக்கும் என 20 சிலிண்டர்களை பகிர்ந்தளித்தனர். (ஒ-14,18)

## முல்லை மீனவர்களால்

# தடைசெய்யப்பட்ட கடற்றொழிலை கட்டுப்படுத்தக் கோரி போராட்டம்



முல்லைத்தீவு, ஜூன் 4

முல்லைத்தீவு கடலில் இடம்பெறும் தடை செய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்துமாறு கோரி முல்லைத்தீவு மீனவர்களால் நேற்றுமுன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையால் எமது வாழ்வாதாரம் மற்றும் கடல் வளம் ஆகியவை அழிக்கப்படுகின்றன. இதனை உரிய அதிகாரிகள் கவனத்திலெடுத்து உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி முல்லைத்தீவு சுற்றுலா கடற்கரையில் படகுகளுடன் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவிக்கையில்;

கடந்த 10 ஆண்டுகளாக தடைசெய்யப்பட்ட இந்த சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையை எந்த அதிகாரிகளும் கட்டுப்படுத்தவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் உள்ள மூன்று சங்கங்கள் இந்தத் தடைசெய்யப்பட்ட தொழிலை அதிகமாக மேற்கொள்கின்றன. குறிப்பாக மாத்தளன் பகுதியிலேயே அதிகளவில் இந்த மீன்பிடி இடம்பெறுகிறது. இதற்கு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரியும் உடந்தையாக உள்ளார்.

மேலும் இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலர் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டபோதும் இதுவரை அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அத்துடன் எரிபொருள் விலையேற்றத்திலும் தெற்கிலிருந்து அதிகளவான படகுகள் முல்லைத்தீவு கொக்குளாய் பகுதியில் வந்து தரித்து நிற்கின்றன.

எமது இந்த வாழ்வாதாரப் பிரச்சினைக்கு மூன்று நாள்களுள் தீர்வு வழங்கவில்லையேல் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு நீங்கள்தான் பொறுப்பு கூறவேண்டும் என கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரி முன்னிலையில் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் கலிஸ்ரன் தெரிவிக்கையில்,

கடற்படை அனுமதியின்றி நாம் கடலுக்குள் போகமுடியாது. நாளை (இன்று) வட்டுவாகல் கோத்தாபய கடற்படைத் தளத்துக்கு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் சென்று இதுகுறித்து கடற்படையினருடன் கதைக்கவுள்ளோம் - என்றார். (ச-19)

# டீசல் விநியோகத்துக்கு டோக்கன் நடைமுறை

சாவகச்சேரி, ஜூன் 4

சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் விநியோகத்துக்கு டோக்கன் வழங்கும் நடைமுறை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த எரிபொருள் நிலையத்துக்கு நேற்று பகல் டீசல் பவுஸர் வந்தடைந்தது. இதனையடுத்து அங்கு நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு வரிசையில் காணப்பட்டன.

இதன்போதே எரிபொருள் நிலையப் பணியாளர்களால் வரிசையில் நின்றவர்களுக்கு டோக்கன்கள் வழங்கப்பட்டன. (ஒ-14,9)

# இரு இடங்களில் துப்பாக்கிச்சூடு; இருவர் சாவு

கொழும்பு, ஜூன் 4

அளுத்கம - மொரகல்ல மற்றும் பாணந்துறை பிரதேசங்களில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அளுத்கம - மொரகல்ல சம்பவத்தில் உயிரிழந்தவர் 47 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாணந்துறை பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபரொருவராலேயே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் அதிகளவான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மற்றும் கூரிய ஆயுதங்களால் குத்திக் கொலைகள் என்பன இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக கொடுப்பனவில் கடன் தொகை அறவீடு

## சமுர்த்திப் பயனாளர்கள் எதிர்ப்பு

சாவகச்சேரி, ஜூன் 4

**சமுர்த்திப் பயனாளர்களுக்கு அரசால் வழங்கப்பட்டு வரும் கொடுப்பனவில் கடன்தொகையை அறவிட சமுர்த்தி வங்கியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு பயனாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.**

இந்தச் சம்பவம் தென்மராட்சி வரணி சமுர்த்தி வங்கியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சமுர்த்தி பயனாளர்களால் பெறப்பட்ட கடன்தொகை மாதாந்தம் நேரடியாக வங்கியில் செலுத்தப்பட்டு வந்த நிலையில் மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவில் அறவிடுவதாகவும் நேரடியாக வந்து செலுத்த தேவையில்லை எனவும் சமுர்த்தி வங்கியினரால் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் பயனாளர்களுக்கு வழமையாக வழங்கப்படும் கொடுப்பனவுடன் மேலதிகமாக வழங்கப்படவுள்ள தொகையில் கடனை அறவிடவுள்ளதாக தற்போது சமுர்த்தி வங்கி அறிவித்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பயனாளர்கள் கொடுப்பனவை பெறாமல் பிரதேச செயலகத்தில் நேற்று முறையிட்டுள்ளனர்.

தற்போதைய உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பால் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமையைக் கருத்திற்கொண்டு சமுர்த்திப் பயனாளர்களுக்கு அரசினால் மேலதிக கொடுப்பனவு வழங்கப் படுகிறது.

அந்த மேலதிக கொடுப்பனவில் கடன் தொகையை அறவிட வங்கியினர் மேற்கொண்ட நடவடிக்கை சட்டவிரோதமானது என அவர்கள் முறையிட்டுள்ளனர். (ச-9)

---

## கத்திமுனையில் மிரட்டி மோ.சைக்கிள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜூன் 4

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முதியவர் ஒருவரை இனந்தெரியாதோர் கத்திமுனையில் மிரட்டி மோட்டார் சைக்கிளை கொள்ளையடித்துச் சென்றுள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கும் பொன்னாலை சந்திக்கும் இடைப்பட்ட பொன்னாலை - பருத்தித்துறை வீதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

பொன்னாலை பொன்னொளிநகர் பகுதியைச் சேர்ந்த முதியவர் யாழிலுள்ள தனது மகள் வீட்டுக்கு சென்று இரவு 7 மணியளவில் வீடு திரும்பியுள்ளார். வீதியை அண்மித்து இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் அடங்கிய குழு ஒன்று முதியவரை வழிமறித்து கத்திமுனையில் அவரது மோட்டார் சைக்கிளையும் அதனுள் வைக்கப்பட்டிருந்த பணம் ஆகியவற்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து முதியவர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை நடவடிக்கையில் முதியவரின் மோட்டார் சைக்கிள் மற்றும் பணம் ஆகியவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள வீதியொன்றிலில் அநாதரவாக விடப்பட்ட நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளன. (ச-125)

## வங்காளப் புலிக்குட்டிகள் பொதுமக்கள் பார்வைக்கு

கொழும்பு, ஜூன் 4

தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் மூன்று மாதங்களுக்கு முன் பிறந்த 3 ஆண் புலிக்குட்டிகள் நேற்றுமுன்தினம் மக்கள் பார்வைக்காக விடப்பட்டுள்ளன.

கடந்த 2009ஆம் ஆண்டு சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ரொபின் என்ற ஆண் வங்காளப் புலிக்கும் பெண் புலிக்கும் கடந்த மார்ச் 5 ஆம் திகதி 3 குட்டிகள் பிறந்தன.

இவை மூன்றும் ஆண் குட்டிகள் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த மூன்று குட்டிகளும் நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படும் நிலையில் தற்போது மக்கள் பார்வைக்காக விடப்பட்டுள்ளன என பணிப்பாளர் நாயகம் நாயகம் திலக் பிரேமகாந்த தெரிவித்துள்ளார். (ச-இ)

## சர்வதேச சந்தையில் சரியும் மசகு எண்ணெய் விலை

கொழும்பு, ஜூன் 4

உலக சந்தையில், மசகு எண்ணெய் விலை குறைவடைந்துள்ளது.

கடந்த 31 ஆம் திகதி, ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 124.24 டொலர் வரையில் அதிகரித்துக் காணப்பட்டிருந்தது. ஆனால் நேற்று முன்தினம் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 117 டொலராக பதிவாகியுள்ளது. (ஒ-இ)

## அரச நிதி மோசடி; பசில் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 4

தொம்பே, மல்வான, மப்பிட்டிகம பிரதேசங்களில் 16 ஏக்கர் காணியை கொள்வனவு செய்து, பெரிய வீடு, நீச்சல் தடாகம், பண்ணையை நிர்மாணித்து அரசாங்க நிதியை மோசடி செய்ததாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் வர்த்தகர் திருக்குமார் நடேசன் ஆகியோருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா மேல் நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்று வழங்கியது.

கடந்த மே 9 கலவரத்தின்போது மல்வான இல்லம் எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

TECHNA
Technical Institute
தொழில்நுட்பப் பிரிவு
A/L 2024
புதிய பிரிவு ஆரம்பம்
05.06.2022 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.00 மணிக்கு
Engineering Tech
Bio System Tech
Science for Tech
ICT, Agri
Geo, Maths.
அனுமதிகளை நேரடியாக பெற்றுக்கொள்ள முடியும்.
வீரசிங்கம் மண்டபம் 3rd மாடி, யாழ்ப்பாணம்.
077 170 3549




அரசாங்க உத்தியோகத்தர்மாரை சுழற்சி முறையில வேலைக்கு வரச் சொல்லி அரசாங்கம் அறிவிச்சாலும் கூட, வடக்கில அது கன இடங்களில நடைமுறைக்கு வரேலை. அப்பிடி நடைமுறைக்கு வந்தால், என்னென்ன நாளில, எந்தெந்த ஒப்பீஸ்களில சனங்கள் தங்கட அலுவலுக்குப் போகலாம் எண்டு அறிவிக்க அதிகாரிமார் ஏற்பாடு செய்யவேணும். ஏனெண்டால் எரிபொருள் பிரச்சினை அதிகாரிகளுக்கும், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் மட்டுமில்லையே. எல்லாச் சனத்துக்கும் தானே. அதால காசைச் செலவழிச்சு, தூர இடத்தில இருந்து அவசர அலுவலாக, திணைக்களங்கள், பிரதேச செயலகம், கச்சேரி எண்டு போற சனங்களுக்கு அங்க 'இண்டைக்கு டியூட்டியில உந்த வேலைக்குப் பொறுப்பான ஒப்பீஸர் இல்லை. அதால நாளைக்கு வாங்கோ' எண்டு சொன்னால் எப்பிடியிருக்கும்?

சுழற்சிமுறை வேலைத்திட்டம் நடைமுறைக்கு வராட்டியும் கூட, சில அலுவலகங்களில இப்பிடியான பதில் கிடைச்சால், சனங்களுக்கு எப்பிடியிருக்கும்? போனகிழமை அப்பிடியான அனுபவம் யாழ்.மாவட்டத்தில உள்ள, பெரிய பிரதேச செயலகம் ஒண்டில கனபேருக்கு கிடைச்சிருக்கு. அண்டைக்கு கலியாண வீட்டு நாள். அந்தப் பிரதேச செயலகத்தில வேலை செய்யிற ஓராளுக்கும் அண்டைக்கு கலியாணம். அதால கனபேர் அந்தக் கலியாண வீட்டுக்கு போட்டினம். இன்னும் சிலபேர் வேற கலியாண வீடுகளுக்கும் இன்னொரு பக்கத்தால போக, ஏராளமான செக்சன்களில ஆக்களே இல்லை. தங்கட அலுவலுக்காக வந்த சனத்துக்கு பதில் சொல்லக் கூட சில பிரிவுகளில ஆக்கள் இல்லையெண்டுற அளவுக்கு, வெறிச்சோடி இருந்திருக்கு. அரசாங்க உத்தியோகத்தர் எண்டாப்போல, இப்பிடி கலியாணம், காட்சி எண்டு நல்லது கெட்டதுக்கு போகாமல் இருக்க வேணுமோ? எண்டு கேப்பியள். அவையும் மனுசர்தான். எல்லாத்துக்கும் போகத்தான் வேணும். ஆனால் சில ஒழுங்குமுறை இருக்கெல்லோ. ஓராள் லீவெண்டால் அவருக்கு பதிலா இன்னொரு ஆள் பதில் கடமை செய்ய ஓமெண்டாத்தானே லீவு குடுக்கினம். அப்பிடி லீவு குடுக்கேக்க கண்ணை மூடிக்கொண்டு குடுக்காமல் பதில் கடமை செய்யிற ஆள், லீவு கேக்கிற ஆள் செய்த வேலையை செய்யக்கூடியவரா எண்டு பார்த்துக் குடுக்க வேண்டியது மேலதிகாரிமாரின்ர பொறுப்பு. அதை கனபேர் வடிவாச் செய்யிறேலை. அதாலதான் இப்பிடி ஒரே பிரிவில ஒருத்தர் கூட இல்லாமல் கலியாண வீட்டுக்கு கண்டோட போக முடிஞ்சிருக்கு.

சில நேரங்களில அந்த ஒப்பீஸில வேலை செய்தவருக்கு நல்லதோ, கெட்டதோ நடக்கேக்க எல்லாரும் போகவேண்டிய சூழலும் வரத்தான் செய்யும். அப்பிடியெண்டால் அதைப்பற்றி சனங்களுக்கு முதலே ஒரு அறிவித்தல் குடுத்து, 'குறிச்ச நாளில இப்பிடியொரு நிகழ்வு இருக்கிறதால இந்த நேரத்துக்கு மட்டும் அலுவலகம் இயங்கும்' எண்டு மீடியா மூலமாவோ, இல்லாட்டி முன்னுக்கு ஒரு பலகையிலையோ அறிவிச்சால், சனங்களும் அதுக்கேத்தபடி தங்கட வேலையைப் பாப்பினமெல்லோ. இப்ப இருக்கிற இக்கட்டான நிலையிலை சனங்களின்ர போக்குவரத்தையும், அதுகள் படுகிற கஷ்டத்தையும் குறைக்கிற வேலையைத்தான் அரசாங்க உத்தியோகத்தர்மார் பாக்கவேணுமே தவிர, அதைக் கூட்டுற வேலையைப் பாக்கக் கூடாது கண்டியளோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவது பொருத்தமற்றது



## 19 வந்தாலே போதும் என்று சரத் பொன்சேகா தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 4**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக இருந்தால் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல நேரிடும். எனவே, தற்போதைய சூழ்நிலையில் அந்த நடவடிக்கை பொருத்தமற்றது. எனவே, 19ஆவது திருத்தத்தை மீள நடைமுறைப்படுத்தும் வகையில் 21 ஆவது திருத்தம் முன்வைக்கப்படுமானால் அதற்கு ஆதரவு வழங்கலாம்'**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை 21ஆவது திருத்தம் ஊடாக நீக்கப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தி வரும் நிலையிலேயே பொன்சேகா இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சர்வஜன வாக்கெடுப்பை நடத்தக் கூடிய சூழ்நிலையில் தற்போது நாடு இல்லை.

எனவே, அதற்கு வழிவகுக்காத வகையிலேயே சட்டம் இயற்றப்படவேண்டும்.

அந்த வகையில் 19 ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தலாம். அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவையில்லை. இதனை இலக்காகக் கொண்டு 21ஆவது திருத்தம் முன்வைக்கப் படுமானால் அதற்கு ஆதரவளிக்கலாம். தற்போதைய சூழ்நிலையில் அது ஏற்புடைய நடவடிக்கையாக அமையும்' - என்றார்.

அதேவேளை, தனக்கும் அமைச்சு பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டது என சுட்டிக்காட்டிய பொன்சேகா, தன்னால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படாததால் அதற்குத் தான் உடன்படவில்லை எனவும் கூறினார். (ம-44)



## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் யாழ்.பொதுநூலக எரிப்பு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 4

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணப் பொதுநூலக எரிப்பின் 41 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த புதன்கிழமை பொதுநூலகத்தின் முன்பாக இடம்பெற்றது.

இதன்போது முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நினைவுச் சுடரேற்றி நிகழ்வை ஆரம்பித்தார். அதன்பின்னர் போரில் உயிரிழந்த போராளிகளுக்கும், தமிழ்மக்களுக்கும் இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

மேலும் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எழுத்தாளர் மு.ஈழத்தமிழ்மணி ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்தினர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணிச் செயலாளர் கிருபா கிரிதரன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14)

## நாணய நிதியத்துக்குச் சென்று நாட்டை மீட்க வாய்ப்பில்லை!
### ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 4

சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்று, நாட்டை ஒருபோதும் மீட்டெடுக்கமுடியாது என்று ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். கிறீஸ் நாட்டுக்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக்கும் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் கூட்டமொன்றில் அண்மையில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்று, மீண்டெழுந்த நாடுகள் உலகில் இல்லை. 1998ஆம் ஆண்டிலிருந்து ஆர்ஜென்ரீனா 9 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெற்றுள்ளது. இந்த 9 தடவைகளும் அந்தநாடு கடுமையான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தது.

சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்று இலங்கை போன்ற சிறிய நாடுகளால் ஒருபோதும் மேலே வர முடியாது.

தனிநபர் வருமானத்தைவிட தனிநபர் கடன்தொகை இன்று அதிகரித்துள்ளது. கோத்தா, ரணில், ஹரீன் போன்றோரை வைத்து நாட்டில் எதையும் செய்யமுடியாது. இவர்களால் மக்களை மீட்டெடுக்கமுடியாது - என்றார். (ம)

## மஹிந்தவை இந்தியாவுக்கு அழைக்கவுள்ளார் சு.சுவாமி

கொழும்பு, ஜூன் 4

இலங்கையின் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை இந்தியாவுக்கு அழைக்கவுள்ளேன் என்று பா.ஜ.கவின் முக்கியஸ்தரான சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில் மேலும் உள்ளதாவது:-

எனது நண்பரும் இலங்கைத் தலைவருமான மஹிந்த ராஜபக்சவை புதுடில்லியில் பொது நிகழ்வொன்றில் உரையாற்றுவதற்காகவும், இந்து பௌத்த ஆலயங்களுக்குப் பயணம் மேற்கொள்வதற்காகவும் அழைக்கவுள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார். (ம)

## சந்தேகநபராக பெயரிடப்பட்டார் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்ரன்

கொழும்பு, ஜூன் 4



மே 9ஆம் திகதி நாடாளாவிய ரீதியில் ஏற்பட்ட கலவரத்துக்குக் காரணமாக இருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ மற்றும் மஹிந்த கஹந்தகம உட்பட 4 பேர் புதிய சந்தேகநபர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிஷாந்த மற்றும் மிலான் ஜயதிலக்க மற்றும் ஏனைய 11 சந்தேகநபர்களும் ஜூன் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த 9ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். சந்தேகநபர்கள் கொழும்பு கோட்டை நீதிவான் நீதி மன்றில் நேற்றுமுன்தினம் முன்னிலைப்ப டுத்தப்பட்டனர்.

இதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் சட்டத்தரணிகள் ஆகியோர் முன்வைத்த சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (ம)

## சிறுமி வன்புணர்வு சகோதரன் கைது

தனது சகோதரியை கர்ப்பமாக்கிய குற்றச்சாட்டில் சகோதரன் கைதுசெய்யப்பட்டார். மொனராகலை, அத்திமலை பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

13 வயதான குறித்த சிறுமி வயிற்றுவலி காரணமாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் மருத்துவப் பரிசோதனையில் சிறுமி கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது. சிறுமியிடம் நடத்தப்பட்ட விசாரணையில் 16 வயதுடைய சகோதரனால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

சிறுமி மொனராகலை மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனைக்காகச் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் சகோதரர் கைதுசெய்யப்பட்டு சியம்பலாண்டுவ நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். (ச-இ)

### தென்மராட்சியில் களப் பணியாளர்களுக்கு
## சுழற்சி கடமை வழங்கப்படவில்லை

சாவகச்சேரி, ஜூன் 4

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம மட்ட களப்பணியாளர்கள் சுழற்சிமுறையில் கடமைக்கு அழைக்கப்படவில்லை எனப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் உள்ளிட்ட களஅலுவலர்கள் சுழற்சி முறையில் ஒன்றுவிட்ட மறுநாள் கடமைக்கு வருகை தருகின்றனர் எனவும் இதனால் பெரும் சிரமத்தை எதிர்கொள்கிறோம் எனவும் அந்தப் பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே குறித்த பிரதேச செயலகம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அலுவலகப் பணியாளர்களுக்கு வேலைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சுழற்சி முறையில் விடுமுறை வழங்கப்பட்டபோதிலும் அந்த அலுவலரின் சேவை தேவைப்படின் கடமைக்கு அழைக்கப்படுவர். இதேவேளை - கிராம அலுவலர்கள் எந்நேரமும் தமது அலுவலகங்களில் கடமையாற்றுவதால் அவரின் தேவையை அவரது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 இன் மூலம் தீர்வு கிடைக்காது!

கொழும்பு, ஜூன் 4

**21 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகளை எதிர்பார்க்க முடியாது, எனினும் அரசியல் உறுதிப்பாட்டை ஓரளவேனும் சாதகமாக்க முடியும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவரிடம் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவை சந்தித்து கலந்துரையாடல் முன்னெடுத்திருந்தார்.



நீதி அமைச்சில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த சந்திப்பில் நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமைகள் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து கலந்துரையாடியிருந்தனர்.

தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீள்வதற்கான நீண்டகால வேலைத்திட்டமொன்றை உருவாக்கும் முயற்சியில் தான் ஈடுபட்டு வருவதாகவும், அரசாங்கங்கள் மாறினாலும் உறுதியான கொள்கை வகுக்கப்பட வேண்டிய கட்டாயம் இருப்பதாகவும் தெரிவித்துள்ள நீதி அமைச்சர், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள 21 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலமாக மிகப் பெரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது எனவும் கூறியுள்ளார். எனினும் அரச நிறுவனங்களை சுயாதீனமாக செயற்படுத்த வேண்டிய கட்டாயம் மற்றும் நிறைவேற்று அதிகாரத்தின் அநாவசியத் தலையீடுகள் தவிர்க்கப்பட்டு நாடாளுமன்ற கட்டமைப்பு பலப்படுத்தப்படுவது இப்போதுள்ள நிலையில் ஆரோக்கியமானதாக அமையும் எனவும், நாடாளுமன்ற சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டு சகல கட்சிகளின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதன் மூலமாக நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு மாற்றுத் தீர்வுகளைக்காணமுடியும் என நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீள்வதற்கு சர்வதேசத்தின் முழுமையான ஒத்துழைப்புத் தேவைப்படுவதாகவும், அமெரிக்காவால் இலங்கைக்கு கிடைத்துவரும் உதவிகளுக்கு இலங்கை நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், தொடர்ந்தும் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவைப் பலப்படுத்த தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

## கோத்தா கோகம அகற்றப்படாது

கொழும்பு, ஜூன் 4

காலி முகத்திடல் கோத்தா கோகம போராட்டக்காரர்களை அகற்றுவதற்கு எதிரான மனுவொன்றை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

கோத்தா கோகம போராட்டக்காரர்களை அகற்றும் நோக்கில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அதற்கு தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் பொறியியலாளர் ஹஸ்லி அமீன் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி சமிந்திர விக்கிரம, போராட்டம் தற்போதைக்கு ஐம்பது நாள்களைக் கடந்து விட்டதாகவும், அமைதியான போராட்டங்களை கலைக்க அரசாங்கம் ஒருபோதும் முயற்சிக்காது என்றும் உறுதியளித்தார்.

அத்துடன் போராட்டக்காரர்கள் கூடாரம் அமைத்து அப்பிரதேசத்தை வசிப்பிடமாக மாற்றிக் கொண்டுள்ளதால் பொதுமக்கள் மற்றும் ஜனாதிபதி அலுவலக ஊழியர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து மனுதாரரின் மனுவை விசாரணைக்கு எடுக்காமல் நிராகரிப்பதாக நீதியரசர்களான தெஹிதெனிய மற்றும் ஏ.எச்.எம். நவாஸ் ஆகியோர் உத்தரவு பிறப்பித்துள்ளனர். (ஒ-இ)

## 100 ரூபா கொடுப்பதற்கு மறுப்பு: கத்தியால் குத்தி பெண் கொலை

கொழும்பு, ஜூன் 4

இரத்தினபுரி மஹிரகல பிரதேசத்தில் 100 ரூபா கொடுக்காததால் பெண் ஒருவர் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மயோனிகா பிரஷிலானி (வயது-26) என்ற பெண்ணே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவம் தொடர்பில் 21 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரும் தானும் ஒரேஇடத்தில் பணிபுரிகின்றோம். சம்பவ தினத்தன்று பெண்ணின் வீட்டிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவிலுள்ள வீதியொன்றில் வைத்து அவரிடம் 100 ரூபா பணம் கேட்டேன்.

பணம் கொடுக்க மறுத்ததையடுத்து அவரை மூன்று இடங்களில் கத்தியால் குத்திவிட்டு தப்பிச் சென்றேன் என சந்தேகநபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

சந்தேகநபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும் போதைப்பொருள் வாங்கவே பணம் கேட்டுள்ளார் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபரை இரத்தினபுரி நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## உயர்வடைந்தது பைகளின் விலை

கொழும்பு, ஜூன் 4

பாடசாலை, தொழில், வெளிநாட்டுப் பயணங்கள் உள்ளிட்டவற்றுக்கு பயன்படுத்தும் அனைத்து வகையான பயணப் பைகளின் விலைகளும் கணிசமான அளவு உயர்ந்துள்ளன.

உள்நாட்டு உற்பத்தி தட்டுப்பாடு மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடு ஆகியவையே இதற்குக் காரணம் எனப்படுகிறது.

முன்னர் 450 ரூபாவாகக் காணப்பட்ட சிறிய பைகள் தற்போது 950 ரூபாவாகவும் 700 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட பைகள் தற்போது ஆயிரத்து 400 ரூபாவாகவும் அதிகரித்துள்ளன.

இறக்குமதிப் பொருள்களுக்கான வரியை அரசாங்கம் அதிகரிக்க மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய தற்போதைய விலையில் காணப்படும் பைகளின் விலை மேலும் அதிகரிக்கலாம் என விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## 21ஆவது திருத்தத்தை ஆதரிக்காவிடின் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர்

### எச்சரிக்கிறார் பைஸல் முஸ்தபா

21 ஆம் திருத்தச்சட்டத்துக்கு ஆதரவளிக்காதவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்று சிறிலங்கா சுதந்திர கட்சியின் உப தலைவரும் முன்னாள் அமைச்சருமான பைஸல் முஸ்தபா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

19ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களே 21ஆம் திருத்தச் சட்டத்திலும் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. ஒரு சில விடயங்களில் சில திருத்தங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஜனாதிபதி அமைச்சுப்பதவி வகித்தல், ஜனாதிபதிக்கு பிரதமரை நீக்கும் அதிகாரத்தை இல்லாமல் செய்தல் போன்ற சில விடயங்களே மாற்றப்பட்டிருக்கின்றன.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வதாக இருந்தால் அதற்கு மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்குச் செல்லவேண்டி ஏற்படுகின்றது. அதனால் இரண்டாம் கட்டமாக அதனை செய்யவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. 21ஆம் திருத்தத்துக்கு ஆதரவளிக்காதவர்களுக்கு மக்கள் அடுத்த தேர்தலில் தகுந்த பாடம் புகட்டுவார்கள். அதேபோன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வீட்டுக்கு செல்ல வேண்டும் என்பதும் மக்களின் கோரிக்கையாகும். என்றாலும் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி பதவி விலகினால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்கும் கட்சியான பொதுஜன பெரமுன கட்சியில் இருந்தே ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்பட வாய்ப்பு இருக்கின்றது. இன்று மக்களின் அதிகாரமே ஓங்கி இருக்கின்றது. அதனால்தான் 5 வருடத்துக்கு பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ச மக்களின் எதிர்ப்பால் பதவி விலகவேண்டி ஏற்பட்டிருக்கின்றது. சட்டப்பிரச்சினை இல்லாவிட்டால் ஜனாதிபதியும் பதவி விலகி இருப்பார் -என்றார். (ஒ-இ)

## 21ஆம் திருத்தம் வாக்கெடுப்பின் போது எம்.பிக்களின் வீடுகளுக்கு முன்னால் திரளுங்கள்

### மக்களைக் கோருகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜூன் 4

21 ஆம் திருத்தச்சட்ட வரைவு மீதான வாக்கெடுப்பின்போது மக்கள் தமது மக்கள் பிரதிநிதிகளின் வீடுகளுக்கு முன்பாக ஒன்றுகூட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரசியல் கட்டமைப்பிற்கான மாற்றத்தை அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தில் இருந்து ஆரம்பிப்போம். அரசமைப்பின் 18 ஆவது திருத்தத்துக்கு எதிராக செயற்பட்ட நான் 20 ஆவது திருத்த[illegible] வழங்கியதை பாவச்[illegible] கிறேன்.

21ஆவது திருத்தத்தை தோற்கடிக்க நாடாளுமன்றத்துக்குள்ளும், அரசியல் கட்சிக்குள்ளும் தனிப்பட்ட நிலைப்பாட்டை முன்னிலைப்படுத்தி சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுவதை [illegible] அரசியல் [illegible] வேண்டும் -என்றார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தை கணக்கெடுக்காத கும்பலால் நாடு அழிந்தது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ஆவேசம்



கொழும்பு, ஜூன் 4

நாளுக்குநாள் நாடு அதலபாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது என்று சர்வதேச தரவரிசைப்படுத்தல் நிறுவனங்களில் இருந்து எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இந்த எச்சரிக்கைகளை கணக்கெடுக்காத குழுவால்தான் நாடு பேரழிவுக்குள் தள்ளப்பட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அரச நிர்வாக சேவை அலுவலர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனிநபரின் தன்னிச்சையான முடிவுகளால்தான் நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்தது. தனி நபர்களை இலக்காகக் கொண்டு அரசமைப்புத் திருத்தங்களை மேற்கொள்ளக்கூடாது. அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறைமைக்கு ஏற்ப வேலைத் திட்டத்தை உருவாக்குவதே ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியினது நோக்கம். ஐக்கிய மக்கள் சக்தி 21ஆவது திருத்தத்துக்கு எதிரானது என சில வங்குரோத்துக் குழுக்கள் பரப்புரையை மேற்கொண்டு வருகின்றன.

21ஆவது திருத்தத்தை கொண்டுவரவேண்டும் என்று வலியுறுத்திய ஐக்கிய மக்கள் சக்தி எதற்காக எதிர்க்க வேண்டும் -என்றார். (ம)

# கிருமிநாசினி கலந்த மதுபானம் விநியோகம்

## ஆளும் கட்சி அரசியல்வாதியின் தொழிற்சாலைக்குத் தொடர்பு

கொழும்பு, ஜூன் 4

பெரும் தீங்கை விளைவிக்கும் தரமற்ற மதுபானங்களை அரசாங்க பகுப்பாய்வாளர் அறிக்கையின்றி ஆளும்கட்சி அரசியல்வாதி ஒருவரால் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

பொதுக் கணக்குகளுக்கான குழுவான கோபா குழுவால் கடந்தவாரம் மதுபானங்களுக்கு தரநிலைகளைக் குறிப்பிடல் மற்றும் மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு பல்வேறு நிபந்தனைகளை உள்ளடக்கி மது விற்பனை யில் சந்தை ஏகபோகத்தை நிறுவுவதை தடுக்க நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் மதுவரி திணைக்களத்துக்கு உத்தர விடப்பட்டது.

அதன்படி மதுவரித் திணைக்களம், அரச பகுப்பாய்வாளர் திணைக்களம், இலங்கை தரநிலை நிறுவனம், தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் உள்ளூர் மதுபான தொழில்துறை உறுப்பினர்கள் இணைந்து நாட்டில் உள்ள அனைத்து மதுபானங்களுக்கும் புதிய தர நிலைகளை அறிமுகப்படுத்தினர்.

இதன்போது களுத்துறையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவருக்குச் சொந்தமான இரண்டு மதுபான உற்பத்தி ஆலைகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

அந்த இரு தொழிற்சாலை களும் அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் இறுதி தர அங்கீகாரச் சான்றிதழைப் பெறாமல் உள்ளூர் வகை மது பானங்களின் மிகப்பெரிய தொகுதியை சந்தையில் விநியோகித்துள்ளமை குறித்த அதிர்ச்சித் தகவல்கள் தெரியவந்துள்ளன.

இந்த மதுபான தொகுதிகள் தரமற்றவை எனவும் அதில் ஆபத்தான இரசாயனங்கள் கலந்திருப்பதுடன் கை சுத்திகரிப்பு திரவங்கள் மற்றும் கிருமி நாசினிகள் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் இந்த அபாயகரமான கையிருப்புக்களை பொதுமக்களுக்கு வெளியே விநியோகிக்க அனுமதித்தமை மற்றும் குறிப்பிடப்பட்ட இரண்டு மதுபான நிறுவனங்களும் குறிப்பிட்ட தொகுதியின் அனைத்து தயாரிப்புக் களையும் சேகரித்து அவற்றை தொழிற்சாலைகளுக்கு திருப்பி அனுப்ப வழிவகுத்தமை ஆகியவை தொடர்பில் அரச பகுப்பாய்வுத் திணைக்களம் மற்றும் அரச அமுலாக்க அதிகாரிகள் விசாரணைக்குட் டுத்தப்பட்டுள்ளனர் என மதுவரித் திணைக் கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ரணிலுடன் இருப்பவர்கள் திருடர்களா? குற்றச்சாட்டை நிராகரிக்கிறது ஐ.தே.க

கொழும்பு, ஜூன் 4

ரணில் விக்ரமசிங்கவுடன் இருப்பவர்கள் அனைவரும் திருடர்கள் எனத் தெரிவிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முயற்சிக்கின்றார். எனவே இந்த அபாண்டமான குற்றச்சாட்டை அவர் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தயா கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் வங்கியில் இருந்து நான் அதிக பணம் கடன் பெற்றதாகவும், கடந்த வருடங்களாக ஒரு சதமேனும் செலுத்தவில்லை எனவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குற்றம் சாட்டியிருந்தார்.

அவர் இந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்றத்திலும் தெரிவித்திருந்ததுடன் பின்னர் ஊடக சந்திப்பொன்றின்போதும் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்றில் தெரிவித்த விடயத்துக்கு என்னால் நடவடிக்கை எடுக்க முடியாது. என்றாலும் ஊடக சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கு எதிராக என்னால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். சாணக்கியன் தெரிவித்திருப்பது போல் ஒரு சதமேனும் மக்கள் வங்கியில் இருந்து நான் கடன் பெற்றதில்லை. எனது கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் என் மீது பொய்க் குற்றச்சாட்டுத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சாணக்கியனுக்கு தனிப்பட்ட பிரச்சினைகள் இருக்கலாம். அதற்காக என்னை இவ்வாறு அவர் கூற முடியாது -என்றார். (க-இ)

# மஹிந்தவிடம் வாக்குமூலம்; பிற்போட்டது ஆணைக்குழு

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடலிலும் அலரிமாளிகை அருகிலும் நடத்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் வாக்குமூலம் பெறுவதை பிற்போடுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

முன்பு குறித்த வன்முறைச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் இதுவரை அனைத்துப் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலைத் திணைக்கள அதிகாரிகளிடம் இன்னமும் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. இதன் காரணத்தால் மஹிந்தவிடம் வாக்குமூலம் பெறுவதை பிற்போடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களிடம் தற்போது வாக்குமூலம் பதிவுசெய்யப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து விசாரணைகளுக்காக மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட அரசியல்வாதிகளிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

# கொள்கலன்கள் தேக்கம்; உடன் விடுவிக்க பணிப்பு

கொழும்பு துறைமுகத்தில் 800 க்கும் அதிகமான கொள்கலன்கள் தேங்கியுள்ளமையால் இடப்பற்றாக் குறை நிலவுகிறது என இலங்கை கடல்சார் முகவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

துறைமுகம், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. சில கொள்கலன்கள் 10 வருடங்களுக்கு மேலாக தேங்கியுள்ளன. இதனால் துறைமுகத்தில் இடப்பற்றாக்குறை நிலவுகிறது. அந்த இடங்களில் பயனுள்ள செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது என இலங்கை கடல்சார் முகவர்கள் சங்கம் சுட்டிக்காட்டியது.

இந்நிலையில் துறைமுகத்தில் தேங்கியுள்ள கொள்கலன்களை உடன் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுங்க மற்றும் துறைமுக அதிகாரிகளுக்கு பணித்தார்.

அத்துடன் இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகளுக்காக 70 மில்லியன் அமெரிக்க டொலர் கப்பல் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# மலேசியாவில் தொழில்வாய்ப்பு; பயிற்சி மையம் நிறுவ ஒப்பந்தம்

கொழும்பு, மே 4

மலேசியாவில் தொழில்வாய்ப்புகளை இலக்காகக் கொண்டு சிறப்புப் பயிற்சி மையத்தை நிறுவுவது தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதில் மலேசிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சும் இலங்கையின் தொழில் அமைச்சும் கையெழுத்திட்டன.

தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் மலேசியத் தூதுவர் டான் யாங்தாய் ஆகியோருக்கு இடையில் விசேட சந்திப்பு அமைச்சில் இடம்பெற்றது. இதன்போதே குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்புக்களை உருவாக்குமாறு அமைச்சர் மனுஷ நாணயக்கார மலேசியத் தூதுவரிடம் கோரிக்கைவிடுத்தார்.

இதற்கு மலேசியத் தூதுவர் பதிலளிக்கையில், உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்து உரிய காலத்தில் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் இலங்கையர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை வழங்குவது குறித்த வேண்டுகோள் கவனத்திற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மீளுயிர்க்கிறதா நீதி?

இலங்கையின் நீதித்துறை நேர்படப் பயணிக்கத் தலைப்பட்டுள்ளது என்ற எண்ணம் பல தரப்பினரிடத்திலும் கடந்த இரண்டு வாரங்களாக வெகுவாகவே உணரப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி கோத்தாபய தலைமையிலான அரசாங்கம் நிறுவப்பட்டதன் பின்னர், இந்தத் தேசத்தில் இறந்து,புதைந்துபோன கதையாக இருந்த நீதி, மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக உயிர்ப்புப் பெறுகின்றது போன்ற தோற்றப்பாடு வலுவாகவே தென்பட ஆரம்பித்திருக்கின்றது.

சர்வ அதிகாரங்களையும் கொண்டு ஜனாதிபதி வழங்கிய பொதுமன்னிப்பைச் சவாலுக்கு உட்படுத்தி நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய மீண்டும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார் துமிந்த சில்வா, கடைந்தெடுத்த இனவாதியான விமல் வீரசன்ஸவின் மனைவிக்கு சிறைத்தண்டனை கிடைத்திருக்கின்றது, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களாக உள்ள இராணுவப் புலனாய்வாளர்கள் ஒன்பது பேரையும் மீண்டும் சிறையிடுமாறு தீர்ப்பிடப்பட்டிருக்கின்றது. இப்படியாக நீண்டு செல்கின்றன அண்மைக்காலமாக இலங்கையில் நிலைநாட்டப்பட்ட நீதியின் தேடுகை.

அப்படியானால் உண்மையிலேயே இலங்கையில் நீதி மீளுயிர்த்துவிட்டதா? அது இறவாதிருக்கின்றதா? மேற்குறிப்பிட்ட இந்த வரலாற்றுத் தீர்ப்புகளும் அதனால் ஏற்படுத்தப்படும் திருப்பங்களும் நீதி கொண்டிருக்கும் முதுகெலும்புத்தனத்தின் வெளிப்பாடுதானா? அல்லது இந்தத் திடீர் 'நீதிக்கான தேடுகை' ஏதோவொரு வரப்பிரசாதத்தை எதிர்பார்த்து, ஒரு தரப்புக்கு அரசாங்கம் தன்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தின் வெளிப்பாடுகளா? என்ற கேள்விகளும் சந்தேகங்களும் எழுவது தவிர்க்க முடியாததே.


வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இலங்கை தற்போது பொருளாதாரப் பின்னடைவில் சிக்கிச் சீர்குலைந்துள்ளது. ரூபாவால் இந்த நாட்டுக்கு மீட்சியில்லை என்ற நிலையில் டொலரைத் தேடவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு இலங்கை தள்ளப்பட்டுக் வெகுகாலமாகிவிட்டது. ஆயினும், இந்தப் பொருளாதாரப் பின்னடைவில் இருந்து மீண்டுவருவதற்கு ஏற்ற 'சர்வதேசக் கொழுகொம்பு' இதுவரை இன்னமும் இலங்கையின் கையில் கிடைக்கவில்லை. கிடைத்ததெல்லாம் கடன், கடன், கடன்.... !கடன் மட்டுமே!

இப்படியானதொரு பின்னணியில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச ஸ்தாபனங்களின் சலுகைகளையும் மானியங்களையும் பெறவேண்டுமாயின் இலங்கை தன் நிலைபேறான தன்மையை, அரசியல் உறுதித்தன்மையை, நீதிக் கட்டமைப்பை நிலைநாட்ட வேண்டியதும் சர்வதேசத்துக்கு எண்பிக்க வேண்டியதும் இன்றியமையாததே. ரணில் பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் அமைச்சரவை முற்றுமுழுதாக மறுசீரமைக்கப்பட்டிருப்பதாக வெளியுலகுக்கு ஒரு மாயத்தோற்றம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பழைய அதே அமைச்சர்களே இப்போதும் அமைச்சரவையில் புதிய அமைச்சர்கள் என்ற முத்திரையோடு குந்தவைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது இலங்கைக்குள் எல்லாமே சரி செய்தாகிவிட்டது, பொருளாதாரத்தில் இருந்து இலங்கை மீண்டால் அந்தப் பிரச்சினையும் தீர்ந்து என்றென்றைக்கும் இலங்கை நீதியின், ஜனநாயகத்தின் சொர்க்கபுரியாக மாறிவிடும் என்ற தோற்றப்பாட்டை வலிந்து ஏற்படுத்த வேண்டிய தேவை கொழும்புக்கு. ஒரு நாட்டின் அரசியல் உறுதித்தன்மை நிலைப்படுத்தப்படுவது அந்த நாட்டின் நீதிக்கட்டமைப்பின் அடிப்படையில்தான். அந்த வகையில் இலங்கையில் நீதி இப்போது புத்துயிர்ப்புப் பெற்றிருக்கின்றது, அது இறவாதிருக்கின்றது என்ற எண்ணப்பாடு வலிந்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொல்வதாயின், நீதியைக்காட்டி சர்வதேசத்திடம் பிச்சை எடுப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் என்பது தெட்டத்தெளிவாகவே புலனாகின்றது. உண்மையாகவே மேற்குறித்த அனைத்து தீர்ப்புகளும், நீதிமன்ற உத்தரவுகளும் எவ்வித அரசியல், பொருளாதார ஆதாயங்களும் அற்றவையெனில் , மிருசுவில் படுகொலையாளி சுனில் ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பும் இரத்துச் செய்யப்படுவதோடு, சிறைகளில் தசாப்தக் கணக்கில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். ஆனால்" கண் துடைப்பு நீதி' நாடகத்தில் அப்படியெல்லாம் நடக்காதே.

நாளொரு நல்வார்த்தை

"பிறரது அன்புக்குப் பாத்திரமாவதைவிட பிறரது நம்பிக்கைக்குப் பாத்திரமாவது பன்மடங்கு மேல்" - டொனால்ட்



### சிறுவர் மருத்துவமனையில்

# மருந்துப் பற்றாக்குறைக்கு மேலதிகமாக உணவுகளுக்கும் பெரும் தட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 4

**லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் மருந்துகளுக்கு மேலதிகமாக கடுமையான உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

சிறுவர்களின் சரியான வளர்ச்சிக்கு புரதம் உணவில் சேர்க்கப்படவேண்டும் என்றாலும் தற்போது நோயாளிகளாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு தினசரி உணவில் இறைச்சி, மீன், முட்டை, பருப்பு ஆகியன வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தீக்காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சில சிறுவர்களுக்கு தினமும் 10 முட்டைகள் கொடுக்கவேண்டும். ஆனால் தற்போது கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. தற்போது தீக்காயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களுக்கு ஒரு கொடையாளரிடமிருந்து குறைந்த எண்ணிக்கையிலான முட்டைகளை பெற்றுள்ளதாக குறிப்பிடப்படு கின்றது. அவை முடிந்த பின்னர் அந்த குழந்தைகளுக்கு முட்டைகளை வழங்க முடியாத நிலைமை மீண்டும் ஏற்படும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(ஒ-இ)

# அத்தியாவசிய உணவுப்பொருள்களை போதுமான அளவில் வைத்திருங்கள்

### ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, ஜூன் 4

அத்தியாவசிய உணவுப் பொருள்களை போதுமான அளவு கையிருப்பில் வைத்திருக்குமாறும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் மூலம் பொருள்களுக்கு தட்டுப்பாடு இருப்பதாகக் காட்டி சில வர்த்தகர்கள் விலையை அதிகரிக்கச் செய்யும் முயற்சிகளை தடுக்க முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய துறைகள் எதிர்நோக்கும் சவால்களுக்கு விரைவான தீர்வு காண்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மொத்த சந்தைக்கு விநியோகிக்கப்படும் விவசாய விளைபொருள்களின் ஒரு பகுதியை நேரடியாக கிராம சந்தைக்கும் வழங்க வேண்டும். இதன் மூலம் போக்குவரத்துச் செலவு குறைவடைவதனால் கிராமப்புற நுகர்வோர் குறைந்த விலையில் பொருள்களை கொள்வனவு செய்யலாம் - என்றார்.

வர்த்தகர்களின் விருப்பத்துக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்ய இடமளிக்காமல் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் நியாயமற்ற விலையில் வர்த்தகம் செய்வோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

(ச-இ)

நாளை
05.06.2022
ஞாயிற்றுக்கிழமை
வைகாசி 22
ஷஷ்டி விரதம்

சுபநேரம் : 08.52 - 10.22
ராகுகாலம்: 04.22 - 05.52
உலக சுற்றுப்புற தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

facebook















# மணல் அகழ்விலிருந்து காப்பாற்றப்படுமா கிளிநொச்சி?

■ மு.தமிழ்ச்செல்வன்

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தை பீடித்திருக்கின்ற புற்றுநோய் சட்டவிரோத மணல் அகழ்வு. இந்த மாவட்டம் இதிலிருந்து மீள முடியாத அளவுக்குத் தற்போது சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. கிளிநொச்சியில், இயற்கை அன்னையின் கதறல், இன்னுவரையில் எவரது மனச் சாட்சியையும் தட்டியெழுப்பவில்லை.

குறிப்பாக மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் கிளாலி, அல்லிப்பளை, தர்மக்கேணி, மாசார், சோரன்பற்று, புலோப்பளை, இயக்கச்சி போன்ற பிரதேசங்களிலும், பூநகரியில் கௌதாரிமுனை, முட்கொம்பன் பகுதிகளிலும், கரைச்சியில் இரணைமடு, அக்கராயன்குளம், மருதநகர், வட்டக்கச்சி, கோரமோட்டை பன்னங்கண்டியிலும், கண்டாவளையில் கல்மடு, கண்டாவளை போன்ற பிரதேசங்களிலும் இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது. இதில் இரணைமடுகுளத்துக்குக் கீழ்பகுதியில் வகைதொகையின்றி அகழப்படும் சட்டவிரோத மணல் அகழ்வே மாவட்டத்துக்குப் பெரும் ஆபத்தானது.

## எச்சரிக்கைக்குக் கட்டுப்படாத மணல் மாபியாக்கள்

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த ஜனவரியில் இடம்பெற்ற கூட்டத்தின்போது, 'கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வால் மாவட்டத்தில் இருக்கின்ற மிகப்பெரும் வளமான இரணைமடு குளத்துக்கு மிகப்பெரும் ஆபத்து ஏற்படும், மாவட்டத்திலிருக்கின்ற மிகப்பெரும் வளத்தை நாம் இழக்க முடியாது என கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவித்ததுடன், மணல் அகழ்வுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வலியுறுத்தினார். இருந்தும் இன்றுவரை இந்தப் பிரதேசத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. மாவட்டத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரே சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் யார் என்பது பரம இரகசியமல்ல. அது ஊருக்கே தெரியும். தெரிந்தும் என்ன பயன்? அரசியல் தரப்புக்களின் செல்வாக்கு உள்ளவர்களாக மணல் மாபியாக்கள் காணப்படுகின்றனர். ஒரு சிலர் அரசியல் கட்சியின் பிரதேச செயற்பாட்டாளர்களாகவும் உள்ளனர்.

## கூட்டங்களும், தீர்மானங்களும்

சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் சமூகத்திலிருந்து எதிர்ப்புக் குரல்கள் எழுகின்றபோது அல்லது ஊடகங்களில் தொடர்ச்சியாக செய்திகள் வெளிவருகின்றபோது அதிகாரிகள் கூடுவார்கள், சில மணித்தியாலங்கள் பேசுவார்கள், தீர்மானங்கள் மேற்கொள்வார்கள், படையினர் சில நாள்கள் அல்லது வாரங்கள் கொஞ்சம் இறுக்கமான நடவடிக்கையில் இருப்பார்கள், பின்னர் அவ்வளவுதான். அதற்கு பின்னர் வேதாளம் மீண்டும் முருங்கை ஏறிவிடும். இதுதான் கடந்த சில வருடங்களாக கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் இடம்பெற்று வருகின்ற நடவடிக்கைகள். இறுக்கமான நடவடிக்கைகள், கடுமையான தண்டனைகள் என்பன அறவே இல்லை. கனியவளத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், பிரதேச சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மக்கள் பிரதிநிதிகள், பாதுகாப்புப் படையினர், பொது அமைப்புக்கள் என அனைவருக்கும் இதில் பொறுப்புண்டு. ஆனால் சமூகம் இந்தச் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக தனது கண்களை மூடிக்கொண்டிருக்கிறது. நமக்கேன் வம்பு என்ற கணக்கில் சமூகம் காணப்படுகிறது. இது சட்டவிரோதிகளுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

## இரணைமடுவுக்கு ஆபத்து

இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டுக்கு கீழ் பக்கமாக ஒன்றரை கிலோ மீற்றரிலிருந்தே மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது. இந்தக் குளம் கொங்கிறீட் அணைக்கட்டால் அமைக்கப்பட்ட குளம் அல்ல. மண் அணைக்கட்டால் அமைக்கப்பட்ட குளமாகும். எனவே இந்தக் குளத்தின் கீழ் மணல் அகழ்வு மேற்கொள்வதே ஆபத்து என்ற நிலையில், தற்போது 50 அடி வரைக்கும் மணல் அகழப்பட்டமை பேராபத்து என்று நீர்பாசன திணைக்கள பொறியியலாளர்கள் எச்சரித்து வருகின்றனர்.



அத்துடன், கௌதாரிமுனை, கிளாலி மற்றும் பளையில் மேலும் பல கிராமங்களில் மேற்கொள்ளப்படுகின்ற மணல் அகழ்வு கடல் நீரை ஊருக்குள் கொண்டு வந்து ஊரை உவராக்கும் நிலைமையை ஏற்படுத்துகிறது. இது தொடர்பிலும் ஊடகங்களாலும் பொது அமைப்புக்களாலும் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் எந்தப் பயனும் இதுவரையில் இல்லை.

எனவே இந்த நிலைமையை இதற்கு மேலும் நீடிக்க விடாது, தற்போதாவது உரிய நடவடிக்கையை துறைசார் அதிகாரிகள் மேற்கொண்டு தம்மையும் மாவட்டத்தையும் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் பொது மக்களினதும் ஆர்வலர்களினதும் கோரிக்கை. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மிகப்பெரிய

# கடற்புல் தாவரம் கண்டுபிடிப்பு



சிட்னி, ஜூன் 4

மேற்கு அவுஸ்திரேலியாவில் நீருக்கடியில் வளரும் உலகின் மிகப்பெரிய தாவரத்தை ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் கண்டு பிடித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் மேற்கு கடற்கரையில் உள்ள ஷார்க் விரிகுடாவில் இந்தத் தாவரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாவரம் சுமார் 200 சதுர கி.மீ. பரப்பளவில் விரிந்து இருக்கிறது எனவும் இது விரிந்திருக்கும் மேற்பரப்பு கிளாஸ்கோ நகரத்தைவிட சற்றே பெரியது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் இந்தச் செடியைப் பார்க்கும் போது அது ஒரு பெரிய கடல் புல்வெளி என்று நம்பியதாகவும் , ஆனால் அது ஒரு விதையில் இருந்து பரவிய தாவரம் என அறிவியல் சோதனையில் கண்டறியப்பட்டுள்ளது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஒரேயொரு விதையிலிருந்து சுமார் 4ஆயிரத்து 500 ஆண்டுகளாக இந்த கடற்புல் தாவரம் பரவியிருக்கலாம் என நம்பப்படுகிறது. (ச-இ)



# துருக்கி நாட்டின் பெயர் மாற்றம்

**அங்காரா, ஜூன் 4**

**'துருக்கி' தமது நாட்டின் பெயரை 'துருக் கியே' என மாற்றியுள்ளது.**

துருக்கி விடுத்த கோரிக்கைக்கு அமைய ஐக்கிய நாடுகள் சபை 'துருக்கி' குடியரசின் பெயரை 'துருக்கியே' என அதிகார பூர்வமாக மாற்றியுள்ளது.

துருக்கிய வெளியுறவு அமைச்சர் கடந்த வாரம் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரோனி குட்ரெஸ்க்கு இதுகுறித்து கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார்.

அதில் 'துருக்கி' என்பதற்குப் பதிலாக 'துருக்கியே' என அனைத்து விவகாரங்களிலும் பயன்படுத்துங் கள்.

'வான்கோழி' என்று பொருள்படும் ஆங்கில வார்த்தையில் தங்களது நாடு அழைக்கப்படுவதை விரும்பாத துருக்கி, தங்கள் நாட்டின் பெயரைத் தங்களது மொழி உச்சரிப்பிலேயே உலகம் அழைக்கவேண்டுமென்று விரும்புகிறது என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது. அத்துடன் துருக்கிய மக்களின் கலாசாரம், நாகரிகம் மற்றும் மதிப்புகளின் சிறந்த பிரதி நிதித்துவம் மற்றும் வெளிப்பாடாக துருக்கியே உள்ளது எனவும் அந்த நாட்டு ஜனாதிபதி ரிசெப் தையிப் எர்டோகான் தெரிவித்துள்ளார். (ச-.இ)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 . 07 . 1957

உதிர்வு 04 . 06 . 2021



### திருமதி இராசநாயகம் மரியராணி பிலோமினா (ராணி)

"உயிர்தொதமுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வான்:
(யோவான் 11:25)

காயங்கள் ஆறிப் போகும்
கற்பனைகள் மாறிப் போகும்
கனவுகள் கலைந்து போகும்
என்றுமே மாறாமல் இருப்பது
தாய் நம் மீது கொண்ட பாசமும்
நாம் தாய் மீது கொண்ட பாசமும்.

வேலுப்பிள்ளை கடையடி,
மாதகல்.
076 667 9523

பிரிவால் நினைந்து உருகும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(cs. 44833) (2.6)




# குரங்கம்மை 30 நாடுகளில் 550 பேருக்கு!

நியூயோர்க், ஜூன் 4

உலகம் முழுவதும் 30 நாடுகளில் 550 பேருக்கு குரங்கு அம்மை பாதிப்பு உறுதியாகியுள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பேசிய அந்த அமைப்பின் தலைவர் தெரிவிக்கையில்,

நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட 30 நாடுகளில் 550க்கும் மேற்பட்டோர் குரங்கம்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் .

இதுகுறித்து ஆய்வு நடைபெறுவதோடு பாதிக்கப்பட்ட நாடுகள் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் - என்றார். (ச-இ)

4.69 லட்சம் தொன்

# கோதுமை ஏற்றுமதிக்கு இந்திய அரசு அனுமதி

புதுடில்லி, ஜூன் 4

மலேசியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், தான்சானியா ஆகிய நாடுகளுக்கு மட்டும் 4 லட்சத்து 69 ஆயிரம் தொன் கோதுமையை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது என இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.



உள்நாட்டு தேவையைக் கருத்திற்கொண்டு கடந்த மே மாதம் கோதுமை ஏற்றுமதிக்கு இந்திய மத்திய அரசு தடை விதித்தது. இதனால் உலகச் சந்தையில் கோதுமையின் விலை கணிசமாக உயர்ந்தது. பல்வேறு நாடுகள் இந்தியாவிடம் இருந்து கோதுமை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள் ளன. இதேவேளை சுமார் 17 லட்சம் தொன் கோதுமை இந்திய துறைமுகங்களில் தேங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

பருவமழைக்காலம் தொடங்க இருக்கும் சூழலில், மழையால் துறைமுகங்க ளில் இருக்கும் கோதுமை சேதமடையும் என்பதால் ஏற்றுமதி தடையை அரசு நீக்க வேண்டும் எனப் பல நாடுகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த நிலையில் 4 லட்சத்து 69 ஆயிரம் தொன் கோதுமையை ஏற்றுமதி செய்ய இந்திய அரசு அனுமதி அளித்துள்ளது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்** முயற்சியில் வெற்றி கிடைக்கும். நல்லவர்கள் யார் என்பதைக் கண்டறிவீர்கள். நண்பர்களிடம் அளவோடு நெருங்குவது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சுமாராக இருக்கும்.

**இடபம்:** பணியிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். உழைப்பின் மூலம் கூடுதல் நன்மையைக் காண்பீர்கள். கனவு நனவாகும். வசதிகளை மேம்படுத்துவீர்கள்.

**மிதுனம்** : வியாபாரத்தில் லாபம் உண்டு. மகிழ்ச்சிகூடும். நண்பருடன் இருந்து வந்த மனஸ்தாபம் நீங்கும். பயணத்தால் நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்காது.

**கடகம்:** உங்களது செயல்களால் உறவினர் இடையே ஒற்றுமை அதிகரிக்கும்.பணியை சரியாகப் பயன்படுத்துவீர்கள். புதிய துறையில் ஈடுபடுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிம்மம்:** சகபணியாளர்களின் ஒத்துழைப்பால் உங்களுக்கு நன்மை ஏற்படக்கூடும். சிலரது உண்மை முகம் தெரிய வருவதால் குழப்பம் ஏற்படும். தெய்வீக எண்ணங்கள் பெருகும்.

**கன்னி:** தொலைபேசி வழியாக வரும் செய்தி மனஅமைதியை மீட்கும். பணியிடத்தில் இருந்த நெருக்கடி அகலும். புதிய வாய்ப்பை நழுவ [illegible] ஏற்படுத்தும்.

**துலாம்:** உறவினர்களால் ஏற்பட்ட சிரமங்கள் இன்று நீங்கும். பகைவர் மனம் மாறுவர். தாயின் அன்பைப் பெறுவீர்கள். பிரச்சினை ஒன்று தீரும். நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** உறவினர் விஷயத்தில் தலையிட வேண்டாம் ஒருவிஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். வாகன வசதி அதிகரிக்கும். வியாபாரத்தில் வரவு சற்று உயரும்.

**தனுசு:** பயணத்தின்போது பொருள்களைக் கவனமாக வைத்துக்கொள்ளுங்கள். புதிய முதலீடுகள் செய்வதை சில காலத்துக்குத் தவிர்க்கவும். சக பணியாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** பொருளாதார நெருக்கடி சற்றே அகலும். நட்பு வட்டம் விரியும். புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்த தயங்கவேண்டாம். குழந்தைகளால் ஏற்பட்ட சிரமம் நீங்கும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதால் பேச்சில் கம்பீரம் பிறக்கும். சொந்தங்கள் உதவி வேண்டி உங்களைத் தேடிவருவர். கடன் பிரச்சினை தீரும். மனதில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்:** குழம்பிய மனநிலை தெளிவாகி உங்களின் செயற்பாடு மேம்படும். வீண் விவாதங்களைத் தவிர்க்கப்பாருங்கள். பரிசு வாங்குவீர்கள். உங்களின் புகழ் அதிகரிக்கும். பெரியோரின் ஆசி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோத்தாவின் படத்தை தூக்குங்கள் மோடியின் படத்தை மாட்டுங்கள்

## ரோஹன பண்டார எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 4**
**அமைச்சுக்கள் உள்ளடங்கலாக அனைத்து அரச நிறுவனங்களிலும் மாட்டப்பட்டிருக்கும் ஜனாதிபதியின் ஒளிப்படத்தை அகற்றிவிட்டு, அதற்குப் பதிலாக இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியின் ஒளிப்படத்தை மாட்டுமாறு யோசனை முன்வைக்கின்றேன். ஏனெனில் இப்போது இந்தியாவிடம் தஞ்சமடைவதைத்தவிர வேறெந்த வழிகளும் இல்லாது போயுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு அவசியமான உரத்தை வழங்குவதற்கு உடன்பட்டிருப்பதாகவும், அது நாட்டை வந்தடைந்தவுடன் 20 நாள்களுக்குள் அதனை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். இந்தியாவால் வழங்கப்படும் பொருள்களைப் பகிர்ந்தளிப்பதற்கான அரசாங்கமா தற்போது இருக்கின்றது என்ற கேள்வி எம்மத்தியில் எழுந்துள்ளது.

அதுமாத்திரமன்றி அடுத்த போகத்திலிருந்து அரிசி இறக்குமதியைப் படிப்படியாகக் குறைக்கப்போவதாகவும், அதன்மூலம் எஞ்சுகின்ற பணத்தை விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்போவதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகின்றார்.

ஆனால் இறக்குமதியை நிறுத்திய பின்னர் உள்நாட்டு விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு அவசியமான உரத்தை எங்கிருந்து பெறமுடியும்? நாட்டில் டொலருக்கான நெருக்கடி நிலவுகின்ற தற்போதைய சூழ்நிலையில், அரசாங்கம் உரத்தை இறக்குமதி செய்யுமாறு தனியார் துறையினரிடம் கூறுகின்றது. அவ்வாறெனில் தனியார்துறையினர் அதற்குத் தேவையான டொலரை எவ்வாறு பெற்றுக்கொள்வர்?

எமது நாட்டின் வரலாற்றைப் பொறுத்தமட்டில் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் நிலத்தில் விழும் ஒருதுளி மழைநீரையும் விரயமாக்கக்கூடாது எனக்கருதி அதனைச் சேமிக்கக்கூடியவாறு வாவி, குளங்கள் போன்றவற்றை நிர்மாணித்திருக்கின்றார்கள். ஆனால் நாட்டின் நிர்வாகத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவதாகக்கூறி ஆட்சிபீடமேறியவர்கள் நவீனமுறைகளை மாத்திரமன்றி பழமையான முறைகளையும் இல்லாமல் செய்திருக்கின்றார்கள் -என்றார். (ஒ-இ)




# மன்னாருக்கு படையெடுக்கும் வெளிநாட்டுப் பறவைகள்

### பார்வையிட சுற்றுலாப் பயணிகள் ஆர்வம்

மன்னார், ஜூன் 4
மன்னார் மாவட்டத்துக்கு நூற்றுக்கணக்கான வெளிநாட்டுப்பறவைகள் தற்போது படையெடுத்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவை ஆபிரிக்கா, ஆசியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் மணல் தீவுகளிலும் சதுப்பு நிலங்களிலும் வாழ்கின்றன.

'பிளமிங்கோ' என அழைக்கப்படும் இந்த வெளிநாட்டுப் பறவைகள் ஒவ்வொரு ஆண்டும் நீண்டதூரம் பயணித்து மன்னாருக்கு வருகை தருகின்றன.

இவை பருவகாலத்துக்கு ஏற்ப இடப்பெயர்வை மேற்கொள்கின்றன. அதன்படி 300 மைல்களுக்கும் மேல் பயணம் செய்து தமது புதிய வாழ்விடத்தைச் சென்றடைகின்றன.

இந்த நிலையில் இவற்றைப் பார்வையிட மன்னார் மாவட்டத்துக்கு அதிகளவான சுற்றுலாவிகள் தொடர்ச்சியாக வருகை தருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில் இவ்வாறான நலிவடைந்த சுற்றுலாத்தலங்களை கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை அதிகரிக்கலாம் என அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது. (ச-213)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம், மே 4
யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள பலாலி வீதியிலுள்ள கரியபுலம் ஞானவைரவப் பெருமான் கோயில் மகா கும்பாபிஷேகம் இன்று காலை 10.30 மணி முதல் 12.30 மணி வரை நடைபெறும். (ய)

## மஹோற்சவம்


யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் கோயில் மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும். (ய)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 4
வேலணை மேற்கு பெரியபுலம் திருவருள் மிகு மகா கணபதிப் பிள்ளையார் (முடிப் பிள்ளையார்) தேவஸ்தானத்தின் மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும். (ய)

## நூல் அறிமுகமும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஜூன் 4
'பணச்சடங்கு' என்ற தலைப்பில் சிறுகதைத் தொகுப்பு அறிமுகமும், எழுத்தாளர் ஆசி கந்தராஜாவுடனான கலந்துரையாடலும் நாளை 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் 12 மணி வரை யாழ் பொதுசன நூலக குவிமாடக்கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாதன் மற்றும் எழுத்தாளர் ஆசி கந்தராஜா ஆகியோரது உரையும் இடம்பெறும். (ய)



யாழ்ப்பாண நூலக எரிப்பின் 41ஆவது ஆண்டு நினைவேந்தல் அண்மையில் காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. அதன்போது அங்கு சேகரிக்கப்பட்ட சில புத்தகங்கள் யாழ்ப்பாண நூலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச-இ)



மன்னார் நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள விசேட தேவையுடையோருக்கான விளையாட்டு விழா மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது பல விளையாட்டுக்கள் இடம்பெற்று அதில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-14-213)

### விவசாயிகளுக்கு

# எரிபொருள் வழங்காவிடின் விரைவில் உணவுப் பஞ்சம்

### பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 4
விவசாயிகளுக்குத் தடையின்றி எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்படாவிடின் விரைவில் உணவுத் தட்டுப்பாடு உக்கிரமடையும் என தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

அரசின் தவறான நிதித் திட்டமிடுதலாலும் தவறான விவசாயக் கொள்கையாலும் நாடு உணவு உற்பத்தியில் என்றுமில்லாத அளவு மோசமான வீழ்ச்சியை சந்தித்துள்ளது. கடந்த பெரும்போகம் எதிர்பார்த்த அறுவடையைத் தராத நிலையில் சிறுபோக விளைச்சலும் 50 வீதமாகக் குறைவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நாடு பட்டினியை எதிர்நோக்கியுள்ள நிலையிலுங்கூட உணவுற்பத்தியில் அரசு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களில் குறுகிய காலப்பயிர்களான சிறுதானியங்களினதும் அவரை இனப்பயிர்களினதும் செய்கையை ஊக்குவிப்பது அவசியமாகும். இதற்கு வேண்டிய விதைகள் கையிருப்பில் இருக்கின்றபோதும் உழவுக்கும் இறைப்புக்கும் வேண்டிய எரிபொருள்களை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசு இதுவரையில் முன்னுரிமை வழங்கவில்லை.

இந்த நிலையில் தற்போது விவசாயிகள் நிலத்தை உழுவதற்கும் நீர் பாய்ச்சுவதற்கும் எரிபொருள் இன்றித் திண்டாடி வருகின்றனர். இதனால் ஏராளமான விவசாயிகள் சிறுபோகச் செய்கையை கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வேண்டிய டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை தடையின்றி பெற்றுக்கொடுக்க அரச உயர் அதிகாரிகள் உடன் ஆவன செய்யவேண்டும். தவறின் உணவுத் தட்டுப்பாடு மேன்மேலும் உக்கிரமடைவதோடு விரைவில் பட்டினிச் சாவுகளும் நேர்வதை தவிர்க்க முடியாததாகிவிடும் -என்றுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள், விவசாயிகளுக்கு ம.எண்ணெய் வழங்க உதவுங்கள்

## இந்தியத் துணைத்தூதுவரிடம் செல்வம் எம்.பி கோரிக்கை

**மன்னார், ஜூன் 4**

**மன்னார், முல்லைத்தீவைச் சேர்ந்த மீனவர்கள், விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க உதவுமாறு இந்தியத் துணைத் தூதுவரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழும் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்வாதார தொழிலாக மீன்பிடி, விவசாயம் ஆகியவற்றையே மேற்கொண்டு வருகின்றனர்.

இரு மாவட்டங்களிலும் தொழில் நடவடிக்கைகளுக்கு தேவையான மண்ணெண்ணெயை உரிய முறையில் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 78 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெயும் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 31 ஆயிரத்து 180 லீற்றர் மண்ணெண்ணெயும் தேவைப்படுகின்றது. மண்ணெண்ணெய் போதுமான அளவில் அவர்களுக்குக் கிடைக்காததால் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

அரச தரவுகளின் அடிப்படையில் குறித்த அளவு எரிபொருள் தேவை என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

இந்தத் தேவையை முறையே பெற்று தமது வாழ்வாதாரத்தை எந்தவிதத் தடையுமின்றி முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமை இரு மாவட்டங்களிலும் காணப்படுகின்றது.

இதனால் மன்னார், முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் மற்றும் விவசாயிகள் தொடர்ச்சியாக பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றனர்.

எனவே மண்ணெண்ணெய்ப் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க உதவுமாறு கோரிக்கை விடுக்கின்றேன் -என்றுள்ளது.

(ஒ-14-213)

# 3 பில்லியன் டொலருக்காக நாணய நிதியத்துடன் பேச்சு

கொழும்பு, ஜூன் 4

குறைந்தபட்சம் 3 பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கடன் ஒரு விரிவான நிதி வசதியின்கீழ் திட்டமிடப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இந்த மாதத்தின் முதல் வாரத்தில் மற்றொரு சுற்று தொழில்நுட்ப விவாதம் நடைபெறவுள்ளதாக ரொய்ட்டர்ஸ் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)


### துமிந்தவுக்கு வழங்கப்பட்ட

# பொதுமன்னிப்பு இடைநிறுத்தம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதே!

உயர்நீதிமன்றத்தால் சாவுத்தண்டனை உறுதிசெய்யப்பட்ட கைதியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின்கீழ் துமிந்த சில்வா விடுதலை செய்யப்பட்டபோது அதுகுறித்து சட்டத்தரணிகள் சங்கத்தால் கண்டன அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருந்தது. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த முக்கியமான விடயங்களையும், துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை இடைநிறுத்துமாறு உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவையும் மேற்கோள்காட்டி ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியபோது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அந்த முடிவைக் கடுமையாகக் கண்டித்ததுடன், 'பொதுமன்னிப்பு வழங்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளபோதிலும், அது சட்ட ரீதியான பரிசீலனைகளுக்கு அமைவதாக இருப்பதுடன், குறித்த வழக்கை விசாரணை செய்து தீர்ப்பளித்த நீதிபதியிடம் ஜனாதிபதியினால் அறிக்கை கோரப்படவேண்டியது அவசியமாகும். அந்த அறிக்கை மேலதிக ஆலோசனைகளுக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன், அது நீதியமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்டு, பொதுமன்னிப்பு வழங்குவது குறித்து அவரது பரிந்துரையும் பெற்றுக் கொள்ளப்படவேண்டும். இந்தப் படிமுறைகள் துமிந்தவின் விடுதலை விவகாரத்தில் கையாளப்பட்டனவா? என்பதை தெளிவுபடுத்தவேண்டும்' -என்று கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# கஹந்தகம சி.ஐ.டியால் கைது

கொழும்பு, ஜூன் 4

மஹிந்த கஹந்தகம குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி கொள்ளுப்பிட்டி மற்றும் காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் அவர் சந்தேக நபராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே அது தொடர்பான விசாரணைகளுக்காக அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் சரணடைந்திருந்தார். விசாரணைகளின் பின்னர் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ம)

# எம்.பி. ஒருவருடைய மகனுக்கு எதிராக பொலிஸ் முறைப்பாடு

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடைய மகனுக்கு எதிராக பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. குறித்த நபர், தனது காரில் குளர்சாதனப் பெட்டியொன்றை சட்டத்துக்கு முரணாகக் கொண்டுசெல்ல முயன்றுள்ளார். இதைப் பொலிஸார் தடுத்து நிறுத்தியதை அடுத்து, அவர் பொலிஸாரை தகாத வார்த்தைகளால் ஏசியதுடன் பொலிஸாருடன் மோதல் போக்கையும் கடைப்பிடித்துள்ளார். இதையடுத்தே அவருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம)

### ரூ.645 மில்லியனில் அமைக்கப்பட்ட

# மருந்து வழங்கல் கண்காணிப்பு கணினிக் கட்டமைப்பு சீரில்லை

### 'கோப்' குழுவில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 4

மருத்துவ வழங்கல்களை நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்ட கணினிக் கட்டமைப்பு உரிய முறையில் இற்றைப்படுத்தாமை மற்றும் பயன்படுத்தாமை தொடர்பில் கோப் குழுவில் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கோப் குழுவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அழைக்கப்பட்டனர். இதன்போதே மேற்படி கணினிக் கட்டமைப்புத் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டமைப்பை உருவாக்கும் நிறுவனத்துக்கு சுமார் 645 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளமையும் அதன் பராமரிப்புக்கு 5 மில்லியன் ரூபா வழங்குகின்றமையும், எனினும் அந்தக் கட்டமைப்பு முறையாகச் செயற்படவில்லை என்பதும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் குறைந்த செலவில் புதிய கணினிக் கட்டமைப்பொன்றை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் 80 வீதமான பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் வருகை தந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, ரவூப் ஹக்கீம், சம்பிக்க ரணவக்க, எரான் விக்ரமரத்ன, ஹர்ஷ டி. சில்வா, சரத் வீரசேகர, நாலக கொடஹேவா, மதுர விதானகே மற்றும் எஸ்.எம்.மரிக்கார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம)

# ஜே.வி.பியை தேடிச் சென்ற சீனத் தூதுவர் குய் சென்

கொழும்பு, ஜூன் 4

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அனுர குமார திசாநாயக்க மற்றும் இலங்கைக்கான சீன தூதுவர் குய் சென் ஹாங் இடையே நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான காரியாலயத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நாட்டில் நிலவிவரும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கட்சிகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



இந்த நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் விளம்பரச் செயலர் விஜித ஹேரத் மற்றும் சீனத் தூதரகத்தின் இரண்டு அரசியல் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஜே.வி.பி. தலைவரை, அமெரிக்கத் தூதுவரும் அண்மையில் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவர் இடமாற்றம்

சாவகச்சேரி, ஜூன் 4
கொடிகாமம் பிரதேச மருத்துவமனை மருத்துவர், கோப்பாய் மருத்துவமனைக்கு நேற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
கொடிகாமம் பிரதேச மருத்துவமனைக்குள் நேற்றுமுன்தினம் மாலை புகுந்த குழுவினர் கடமையிலிருந்த மருத்துவரை மோசமாகத் தாக்கியுள்ளனர்.
இதனையடுத்தே பாதிக்கப்பட்ட மருத்துவர் நேற்று தொடக்கம் கோப்பாய் மருத்துவமனைக்கு இடமாற்றப்பட்டார்.
இந்த இடமாற்றம் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது. (ஒ-14-9)

# சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கச்சதீவை மீட்பதற்கு முயற்சி

## தமிழக முதல்வருக்கு சாட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 4
பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கச்சதீவை மீட்டுத் தருமாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் இந்தியப் பிரதமர் மோடியிடம் கேட்டுள்ளார் என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் முன்னாள் தலைவர் என்.வி.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.
யாழ்.ஊடக அமையத்தில் சமகால விடயம் குறித்து நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாடு தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் எல்லா நாடுகளிடமும் கையேந்த வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.
தமிழக முதல்வர் ஸ்டாலின் உரிய நேரத்தில் நிவாரணப் பொதிகளை அனுப்பி நாட்டுக்கு மிகப்பெரிய உதவியை செய்துள்ளார்.
இந்த விடயத்துக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எனினும் நாம் விழுந்து கிடக்கும் நிலையில் பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல உரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கச்சதீவை மீட்டுத் தருமாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியிடம் கேட்டுள்ளார்.
இலங்கை - இந்திய சட்டவிரோதமான இழுவைப் படகு தொடர்பான பிரச்சினைகள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் உள்ளன.
இந்த நிலையில் முதல்வரின் இந்தக் கருத்தானது நாடு சார்ந்த, நாட்டு மக்கள் சார்ந்த தன்னிச்சையான மற்றும் வடபகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்களை புறம்தள்ளும் கருத்தாக அமைகிறது.
தமிழக முதல்வர் கச்சதீவு விவகாரத்தைக் கைவிட்டு எங்களுக்கு இருக்கின்ற இழுவைமடி தொழில் பிரச்சினைகளை நிறுத்துவதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.
இதேவேளை இலங்கையின் அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு போன்ற 3 தீவுகள் மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதற்காக இந்தியாவிடம் கையளிக்கப்பட்டு இருக்கின்றன -என்றார். (சு-20)




# யாழ்.போதனா மருத்துவமனைக்கு மருந்துப் பொருள்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு 260 போத்தல் பெட்டீன் மருந்தும், குழந்தைகளுக்கான பரசிற்றமோல் சிறப் 360 போத்தல்களும் நேற்றுக் கையளிக்கப்பட்டன.
நாட்டில் தற்போது நிலவும் மருந்துகளின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக கனடாவில் உள்ள தமிழர் இருவரால் இந்த மருந்துப் பொருள்கள் வழங்கப்பட்டன.
இதற்கமைய சிறுவர்களுக்கான பரசிற்றமோல் சிறப், வெளிநோயாளர் பிரிவில் தேவையான நோயாளிகளுக்கு வழங்கப்படும் என்று மருத்துவமனைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார். (ஒ-14)

# பொதுக்கூட்டம்

சாவகச்சேரி, ஜூன் 4
பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென்மராட்சிப் பிரதேச பிரிவுச் சங்கத்தின் 17 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும்.
சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் மூத்த ஓய்வூதியர் மதிப்பளிப்பும் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளன. (ஒ-14-9)

# அதிவேகத்தால் இருவர் படுகாயம்

கொடிகாமம், ஜூன் 4
வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்சைக்கிள் ஒன்று வீதியிலுள்ள தூணுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
இந்தச் சம்பவம் எருவன் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பதிவாகியுள்ளது.
கொடிகாமம் பகுதியிலிருந்து வரணிப் பகுதி நோக்கி பயணித்தபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியிலுள்ள தூணில் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.
சம்பவத்தில் மீசாலை வடக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞரும், மந்துவில் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞருமே படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் வரணி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் . (சு-159)



# மலேரியா, டெங்கு பரிசோதனை இராமாவிலில் முன்னெடுப்பு

சாவகச்சேரி, ஜூன் 4
யாழ்ப்பாணம் மலேரியா தடுப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், மலேரியா மற்றும் டெங்குப் பரிசோதனை ஜே/320 இராமாவில் கிராம அலுவலர் பிரிவில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டன.
இதன்போது, இராமாவில் பிரிவில் இந்தியாவில் இருந்து வருகை தந்த ஒரு குடும்பத்தின் வீட்டில் மலேரியா தடை இயக்கத்தின் பூச்சி ஆய்வு பிரிவால் மலேரியா மற்றும் டெங்கு நோய் அறிகுறிகள் ஆய்வு செய்யப்பட்டன.
அத்துடன் வெவ்வேறு இடங்களில் இந்தியாவில் இருந்து வருகை தந்த மலேரியா நோயாளிகளும் இனங்காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-159)



# அரச உத்தியோகத்தர்களுக்கு விதைப் பொதிகள் வழங்கல்

யாழ்ப்பாண மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு விதைப்பொதிகள், மரக்கன்றுகள் மற்றும் இயற்கை உரம் பொதிகள் ஆகியன நேற்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் வழங்கப்பட்டன.
நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி அதன் மூலம் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் வகையில் இந்த விதைப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஒ-14-20)

# புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் 2020/2021 ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு அண்மையில் நிகழ்நிலையில் இடம்பெற்றது.
முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சுமார் 520 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதன்போது பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா புதுமுக மாணவர்களை வரவேற்று, வாழ்த்துரை வழங்கினார்.
அதன்பின்னர் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் கணக்கியல், மனித வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், வணிகம், நிதி முகாமைத்துவம் மற்றும் சுற்றுலாவும் விருந்தோம்பலும் அலகு ஆகியவற்றின் தலைவர்கள் தத்தமது துறைகளின் கற்கைநெறிகள் பற்றி மாணவர்களுக்கு விளக்கமளித்தனர். மேலும் பல்கலைக்கழக நடைமுறைகள் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் நூலகர், நலச்சேவைகள் பணிப்பாளர், உதவிப் பதிவாளர், மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு விளக்கமளித்தனர். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 4
ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று நடைபெறவிருந்த நிலையில், தவிர்க்க முடியாத காரணங்களால் அது பிற்போடப்பட்டுள்ளது. பொதுக்கூட்டத்தின் புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# மணவாளக்கோல உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
மட்டுவில் வடக்கு அருள்மிகு பனையடிப் பிள்ளையார் ஆலய மணவாளக் கோல உற்சவம் இன்று .காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.
இதைமுன்னிட்டு சங்காபிஷேகம் உட்பட பிள்ளையார் வீதி உலா, ஊஞ்சல் பாட்டு என்பன ஆலய பிரதம குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளன. (ம-131)

# மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்களுக்கு நடைபெறவுள்ளது.
இதற்கமைய எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 15ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனமும் இடம்பெற்று மகோற்சவம் நிறைவு பெறும்.

******************

மட்டுவில் சந்திரபுரம் அருள்மிகு ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா நாளை காலை 10 மணிக்கு ஆலய பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ திலகேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.
மகோற்சவத்தின் இரதோற்சவம் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணிக்கும்,தீர்த்தோற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கும் 15ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனமும் இடம் பெற்று மகோற்சவம் நிறைவு பெறும். (ம)

## Jaffna Johnians Sports Club

**Notice of Postponement of Annual General Meeting**

The Annual General Meeting scheduled to be held today, Saturday 4th June 2022 has been postponed due to unavoidable circumstances.
The new date will be informed.
We regret any inconvenience caused.

G . Gopikrishna.
Secretary

E . Arnold
President

Jaffna Johnians' Sports Club
St. John's College
Jaffna.

## பொதுக்கூட்ட அறிவித்தல்

**பழைய மாணவர் சங்கம்**
**யா/ யூனியன் கல்லூரி தெல்லிப்பழை**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 2022ஆம் வருடத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் 12.06.2022ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் தலைவர் திரு.தி.வரதன் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளதால் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்

ச.பிறேமிலன் செயலாளர்
(0778448760)

## வரணி ஒன்றியம் - வரணி
## விசேட பொதுக்கூட்டம்

மேற்படி எமது ஒன்றியத்தின் விசேட பொதுக்கூட்டம் கீழ் வரும் திகதியில் நடைபெறும் ஒன்றியத்தின் முக்கிய தீர்மானங்கள் எடுத்தலும், நிர்வாகத்தை உறுதிப்படுத்தலும் யாப்பில் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட இருப்பதால் உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**திகதி : 19.06.2022 ஞாயிற்றுக்கிழமை**
**இடம் : வரணி மத்திய கல்லூரி பிரதான மண்டபம்**
**நேரம் : பிற்பகல் 3.00 மணி**

**செயலாளர்**

(CS-45004) (3/6)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி முதலாம் ஒழுங்கையில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. சுற்றுமதிலுடன் அராலி வீதி ஊடாக பாதை உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

**பார்வையிடும் நேரம்:- 8.00AM-6.00PM**

**தொடர்பு : 076 844 6536, 074 008 9086**

## மரண அறிவித்தல்



அன்னை மடியில்
24 . 04 . 1939

இறைவன் அடியில்
03 . 06 . 2022

### அருட்சகோதரி டொறத்தி பிலிப்

திருச்சிலுவைக் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி டொறத்தி பிலிப் என்பவர் 03.06.2022 வெள்ளிக்கிழமை இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து இறைவனடி சேர்ந்துள்ளார்.
இவரின் இறுதிச்சடங்கு திருப்பலி இன்று சனிக்கிழமை 04.06.2022 பி.ப 3.00 மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
மாகாணத்தலைவி
அருட்சகோதரி றொயினா பவுலின்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### யோகானந்தா லோகேஸ்வரி

தோற்றம் 17.01.1951
மறைவு 16.05.2021

திதி: பூர்வபக்கபஞ்சமி

ஆண்டொன்று உருண்டோடியதம்மா
வாழ்ந்த எழுபது ஆண்டுகள் போதுமென்று
திடீரென நினைத்தது தான் ஏனோ?
கொடிய கொரோனாவுடன் வாழ்வதெமக்கு
சுமையினிலும் சுமையென நினைத்தது தான் ஏனோ?
இறப்பெனும் நிலையை வென்றார் தான் உண்டோ?
வையகம் சுழலும் மட்டும் உன்நினைவு
எங்களில் சுழலும் அம்மா

174/11A கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில்
மகன்மார், மருமகன்மார்
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



தோற்றம்
16 . 10 . 1944

மறைவு
03 . 06 . 2022

### சின்னையா தங்கராஜா (BA-சிலோன்)

( ஓய்வுநிலை உத்தியோகத்தர் ஹற்றன் நஷனல் வங்கி )

சாவகச்சேரி, மந்துவிலை பிறப்பிடமாகவும் இலக்கம் 60, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னையா தங்கராஜா அவர்கள் 03.06.2022 காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-பொன்னி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அப்புத்துரை-ஆரோக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் கனகர் இரத்தினேஸ்வரியின் அன்புச்சகோதரனும் றெபேக்கா ஜீவமணியின் பாசமிகு கணவரும் Dr.கவிதா (பல்வைத்திய நிபுணர்-யாழ் போதனா வைத்தியசாலை), Dr.காண்டீபன் (மருத்துவ நிர்வாகி சுகாதார அமைச்சு), மயூரன் (பிரதி முகாமையாளர், இலங்கை வங்கி, சென்னை), தாரணி (ஆசிரியை, தகவல் தொழில்நுட்பம்-வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம்), Dr.கஸ்தூரி (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜெஷாந்தன் (சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர்,யாழ் பல்கலைக்கழகம்), யசோதினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்), லக்ஷினி (மென்பொருள் கட்டுமானர்), தினேஷ் (உத்தியோகத்தர் டான் TV), Dr.ஜீவகன் (ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிறையன், தக்ஷரா, தருணிகா, டெலிஷ், தியத்திரா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இலக்கம் 60, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நாளை (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பரியோவான் திருமுழுக்குநர் ஆலய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல் :
Dr.கவிதா ஜெஷாந்தன் (077 127 5258)
Dr. தங்கராஜா காண்டீபன் (077 775 5035)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

யாழ் மத்தீயூஸ் வீதியில்
3 படுக்கை அறைகளை கொண்ட
வீடு வாடகைக்கு உண்டு.

077 476 6296 (CR 36075) (3/6)

## A/L CHEMISTRY GROUP CLASSES

2024 - ஆரம்பம் 09.06.2022
2023 - Inorganic
2022 - Royal College Model Paper

ஆசிரியர் : Mr.S.SURESHKUMAR BSc (Hons) PGDE
Brown Rd, Jaffna. 077 555 9028 Kondavil Jaffna.

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரிலும் திருநெல்வேலியிலும் உள்ள வியாபார ஸ்தாபனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1.காசாளர் 2.களஞ்சிய காப்பாளர்
3.சிட்டை எழுதுனர் 4.பண சேகரிப்பாளர்
5.விற்பனையாளர் 6.சமையலாளர்

அனுபவம் உள்ளவர்களுக்கு சம்பளம் 30,000/= மேல் வழங்கப்படும்.
ஆண். பெண் இருபாலாரும் தேவை.

தொடர்பு: 077 183 6462


# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under-mentioned post up to 10.06.2022.

Post of Temporary Scientific Assistants
"Lee Foundation Endowment for Orthopaedic Surgery - Professorial Surgical Unit Faculty of Medicine, University of Jaffna"

Salary scale: Rs.48, 385 / - (fixed) pm

Qualifications:-
Para-Medical or Science Based Qualified Graduates from the following categories:

I

A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.

II

A Second Class (Lower Division) in a Special Degree Examination in the relevant field.

III

An ordinary pass in the B.Sc. Special Degree Examination in the relevant field.

IV.

An ordinary pass in the B.Sc. General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant field.

Note: Having an excellent track record on undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills will be given priority.

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format. Applications with scanned copies of all the documents should be sent on or before Wednesday, 15.06.2022 to the following email address: fomvacancy@univ.jfn.ac.lk. *(Application form is available in the Faculty of Medicine website: http://www.med.jfn.ac.lk/ wp-content / uploads/2021/01/ APPLICATION-Form.pdf)*

Prescribed application form downloaded from the website must accompany paid bank slip for the deposit of a sum of Rs.100.00 credited to the people's Bank Account No (Ref No):970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview. The date of the selection interview for the above post will be notified to the eligible applicants via email.

Registrar
University of Jaffna
Sri Lanka
03.06.2022

(cr.36077) (2.6)

# மரண அறிவித்தல்

## திருமதி தேவராசா புஷ்பராணி



மன்னாரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் கட்டுடையை வதிவிடமாகவும் கொண்ட தேவராசா புஷ்பராணி கடந்த (01.06.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவராசா அவர்களின் அன்பு மனைவியும், கௌரியம்மா (கௌரி), நாகராணி (சுமதி), ஜெபநேசன் (அமலன்), காலஞ்சென்ற தையல்நாயகி (தங்கா), மேரித்திரேசா (செல்வி), யூதாததேயூ (ரூபன்), தேவதர்சினி, பகீரதன் மற்றும் காலஞ்சென்ற ஏகலைவன் (அஜந்தன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகேந்திரம், தங்கவேல், ரேணுகா, பசில், சாந்தினி, கிரிதாஸ், ரூபினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆறுகால் மடம், இன்பம் மலர்சாலையில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 27.05.1946 மறைவு 01.06.2022

மானிப்பாய் கட்டுடை. தகவல்: குடும்பத்தினர் 077 196 4740, 077 495 0882, 077 617 2809

(cs.44990) (2.6)

# மரண அறிவித்தல்



## அமரர் சிவயோகன் இராஜகுமாரி

காரைநகர் களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும் கல்லூரி ஒழுங்கை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவயோகன் இராஜகுமாரி நேற்றுமுன்தினம் (02.06.2022) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கம்பளை குமாரசாமி காலஞ்சென்ற அருளம்பல வாத்தியார் இன் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி (குமாரசுவாமி அன் கோ-கம்பளை) செந்தில்நாயகி தம்பதியரின் அன்பு மகளும் வைத்தியலிங்கம் அமிர்தவல்லி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவயோகனின் அன்பு மனைவியும் சுதனின் (London) பாசத்துக்குரிய தாயாரும் அருணகிரிநாதர் (குமாரசாமி அன் கோ-கம்பளை), காலஞ்சென்ற தேவகுஞ்சரி, காலஞ்சென்ற கமலக்கண்ணன் (கண்ணன் ஸ்ரோஸ்-கம்பளை), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பரம்சோதி (வெங்கடேஸ்வரா), சுரேந்திரன் (கிருஷ்ணா ஜுவலரி).சுவர்ணதேவி, நகுலேஸ்வரி காலஞ்சென்ற சிவகுமார், சிவபாலன், சிவகலை, சிவபூரணி, சிவகௌரி, சிவபாலன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் யாழ்ப்பாண இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியடி
55/14, கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
021 222 4853
077 778 1092

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 01 . 04 . 1975



மறைவு 06 . 05 . 2022

## அமரர்
## தங்கராசா ஜெயராசா

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (05.06.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அழைக் கின்றோம்.

பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.

(cs.44968) (2.6)

குடும்பத்தினர்
077 130 9509

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த மூன்று மாதங்களில் சுகாதாரத்துறை இயல்புக்கு

கொழும்பு, ஜூன் 4

எதிர்வரும் மூன்று மாதங்களில் சுகாதாரத்துறை இயல்புக்குத் திரும்பும் சாத்தியக்கூறுகள் உள்ளன என்று துறைசார் அதிகாரிகள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

சுகாதாரத் துறையில் உடனடியான அவதானம் செய்யவேண்டிய விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மருத்துவத் துறையினரால் இந்த விடயம் ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## ஜனாதிபதிக்கு...

அரசமைப்பின் 21ஆவது கூட்டத்தை இறுதிப்படுத்தும் நோக்கில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வகிப்பவர், தனக்கு தேவையான நேரத்தில் பிரதமரை பதவி நீக்கம் செய்யலாம் என்ற ஏற்பாடு அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும், 21ஆவது உத்தேச திருத்த வரைவில் அந்த ஏற்பாடு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. '20'இல் இருந்த அந்த ஏற்பாடு '21'இலும் தொடர வேண்டும் என பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அந்தக் கோரிக்கை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று நீண்டநேரம் பரிசீலிக்கப்பட்ட போதிலும், இறுதியில் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மாறாக பிரதமரை பதவிநீக்கம் செய்யும் யோசனையை, ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கலாம். அந்த யோசனைக்கு நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை இருந்தால் பிரதமரை பதவி நீக்கலாம். அதாவது, நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன்தான் பிரதமரை ஜனாதிபதி பதவி நீக்கலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஒத்த நடவடிக்கையாக இது கருதப்படுகின்றது. (அ-ம-44)

## மின் கட்டணங்கள்...

பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் வரி அதிகரிப்பு அமைவாக இவ்வாறு மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கோத்தாபயவுக்கு...

போதிலும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்பு அமைச்சை தனக்குக் கீழ் வைத்திருக்க அனுமதிப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 21ஆவது கூட்டத்தை இறுதிப்படுத்தும் நோக்கில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் நீடிக்கும்வரை, அவர் பாதுகாப்பு அமைச்சு பதவியை மட்டும் வகிக்கலாம். அடுத்து வரும் ஜனாதிபதிக்கு அந்த ஏற்பாடு பொருந்தாது. ஜனாதிபதி பதவியை வகிப்பவர் அமைச்சு பதவிகளை வகிக்க முடியாது. இந்த ஏற்பாடு தொடர்பில் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

அதேவேளை, இரட்டை குடியுரிமைத் தடைக்கு எதிர்ப்புகள் வலுக்கவில்லை. இதனால் அந்த ஏற்பாடு திருத்தமின்றி 21இல் உள்வாங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## ஜனாதிபதியின்...

வர்கள் கூட்டத்திலிருந்து பெரமுனவின் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர் என அறியமுடிகின்றது.

பெரமுனவின் சார்பில் பங்கேற்றிருந்த அந்தக் கட்சியின் தவிசாளர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் தினேஷ் குணவர்த்தன ஆகியோர், கூட்டம் நடைபெறும்போது அங்கிருந்து வெளியேறினர் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி தனக்கு ஏற்ற வகையில் பிரதமரை பதவி நீக்கம் செய்யலாம் என்ற சரத்தை, 21ஆவது திருத்த வரைவில் உள்வாங்குவதற்கு கட்சி தலைவர்கள் கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே பீரிஸும், தினேஷ் குணவர்த்தனவும் கூட்டத்திலிருந்து வெளியேறியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. எனினும், 'அவர்கள் இருவரும் பிறிதொரு கூட்டத்தில் பங்கேற்க இருந்ததால், இடையில் சென்றனர்.' என நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-44)

## 9 இராணுவத்தினரும்...

இந்த வழக்கு கொழும்பு விசேட நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தபோதே சந்தேக நபர்களாக 9 இராணுவத்தினரையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

2009ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தின் இறுதிப் பகுதியில் எக்னெலிகொட கடத்தப்பட்டார். இந்த வழக்கில் மேற்படி 9 இராணுவத்தினரும் சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்டு 2019ஆம் ஆண்டு நவம்பரில் அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## ஊர்காவற்றுறையில்...

வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட நபர் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகளும் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டன.

இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125-20)

## நிவாரணப்...

பிரதமர் அலுவலகம் நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களிலேயே முதல் கட்ட விநியோகம் இன்னமும் முடிவுறாத நிலையில் உள்ளது. (ஒ-5)

## மருந்துகள்...

விக்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

சுகாதாரத்துறையில் உடனடியான அவதானம் செய்யவேண்டிய விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

மருத்துவமனைகளுக்குத் தேவையான 234 வகையான மருந்துகள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. உலக சந்தையில் மருந்துகளின் விலை வேகமாக அதிகரித்து வருகிறது. இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு, உள்நாட்டு மருந்துத் தொழிற்துறையை துரிதமாக அதிகரிப்பதற்கும் தேவையான மூலப் பொருள்களை இந்தியக் கடன் உதவியின் கீழ் பெற்றுக்கொள்வதற்குமான சாத்தியக்கூறுகளை ஜனாதிபதி சுட்டிக் காட்டினார் என்றுள்ளது. (அ-ம)

## மன்னாரில்...

மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

மன்னார் பேசாலையில் இருந்து நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லத் தயாரானபோது கடற்படையினர் அவர்களின் படகுகளைச் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். இதையடுத்து மீனவர்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மீனவர் ஒருவர் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர், சமரசத்தின் அடிப்படையில் ஏனைய மீனவர்கள் தொழிலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மாலை 5.30 மணியளவில் கடற்படையினர் அந்த இடத்துக்குச் சென்று மீனவர்களின் படகுகளை மீண்டும் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். அத்துடன், ஆள்கள் இல்லாத தீடை என்னும் பகுதிக்குச் சென்று அங்கு உடற்சோதனைகளை நடத்தியதுடன் பேசாலையில் கடற்றொழிலுக்குச் செல்ல முன்னர் கடற்படையுடன் மீனவர்கள் முரண்பட்டபோது எடுக்கப்பட்ட காணொலியை வைத்து ஆறு மீனவர்களை இனங்கண்டு அவர்களை தாக்கியுள்ளனர். இதையடுத்து அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-ம)

## நீரில்...

வேறுசில குழந்தைகளுடன் குறித்த குழந்தையும் விளையாடிக் கொண்டிருந்துள்ளது. எனினும், நீண்ட நேரமாக அந்தப் பெண் குழந்தையைக் காணவில்லை என்று தேடியபோது, குழந்தை தண்ணீர்த் தொட்டிக்குள் வீழ்ந்து கிடந்துள்ளது என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தண்ணீர்த் தொட்டிக்குள் இருந்து குழந்தை மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போதிலும், தாட்சாயினி ஏற்கனவே உயிரிழந்துவிட்டாள் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

இறப்புத் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் முன்னெடுத்தார். (அ-ம-110)

## தொலைத்தொடர்பு...

என்று தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை 11.25 சதவீதமாக விதிக்கப்பட்ட இந்த வரி, தற்போது 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், தொலைபேசிக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன. மேலும் பெறுமதிசேர் வரி 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக அதிகரிக்கப்பட்டால் தொலைபேசிக் கட்டணம் சுமார் 8 வீதம் அதிகரிக்கும் என்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ம)

## குஞ்சர் கடையில்...

கரவெட்டியைச் சேர்ந்த மேற்படி மாணவன் தலைக்கவசம் இல்லாமல் மோட்டார் சைக்கிளில் சென்றபோது, மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதி மதிலுடன் மோதியதை அடுத்தே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

குறித்த மாணவனுடன் பயணித்த இன்னொரு இளைஞர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## சாட்சியப்...

டமை தொடர்பாக, சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதிய 'Schoolgirl Rape & Four Murders' எனும் நூல் சிட்னியில் நாளை ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஏழாம் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி இராணுவத்தால் கடத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொல்லப்பட்டார். கிருசாந்தியைத் தேடி இராணுவ முகாமுக்குச் சென்ற தாயாரான திருமதி இராசம்மா, சகோதரர் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரும் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர்.

இந்த செம்மணிப் படுகொலை தொடர்பாக சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதிய 'Schoolgirl Rape & Four Murders' எனும் நூலில் குடும்ப உறவினர்களின் சாட்சியங்கள் மற்றும் செம்மணியில் உள்ள குழிகளில் இருந்து உடல்களை தோண்டி எடுத்ததைத் தொடர்ந்து பிரதிவாதிகளின் வாக்குமூலங்கள் எனப்பல விடயங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட் )
- A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**
தரகர் தேவையில்லை
**தொடர்புகளுக்கு : ஜெயம்**
**077 814 7389, 077 241 7589**

## நாளை ஆரம்பம்

**A/L - 2024**
(கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்)
D.M.I - Jaffna 077 848 0604

## Science Personal & Group Classes

**விஞ்ஞான தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புக்கள்**
**Grade - 06 to 11**
ஆசிரியர் : **Mr.S. Vithushan**
(HND in FT, Following BSc in Nat.Sci)
**077 144 5701** (CS 905) (3/6)

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கி வரும் புடைவைக் கடைக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை சுன்னாகத்தை அண்மித்த பகுதியில் வசிப்போர் விரும்பத்தக்கது.
**077 172 3554** (CS 45004) (3/6)

## திருமாங்கல்யம் திருமண சேவை

அரச, தனியார்துறை மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வரன்களை எதிர்பார்க்கும் மணமக்களின் விபரங்கள் எம்மிடம் உண்டு.
மேலதிக விபரங்களுக்கு
**thirumaangalyam.com**
**077 120 4651, 021 728 4433**

## வீடு வாடகைக்கு

4 bed room கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்
4ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி
**077 277 3671** (CS 1120) (3/6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✔ A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
- ✔ கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
- ✔ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி. ✔ நன்னீரூற்று
- ✔ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
- ✔ மூன்று வழிப் பாதை மேட்டு நிலம் கைதடி சந்தி 500 M தூரம்
- ✔ 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✔ 1 பரப்பின் விலை 3 லட்சம்
- ✔ பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை

**தொடர்பு: 076 42 42 090**
**076 43 65 814**
**077 62 34 204**
(CS 1127) 1-6

## வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு தகுதியானவர்களிடமிருந்து கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1). வரவேற்பாளர்கள் **Receptionist**
2). சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் **Marketing Executive**
3). கணினி தொழிநுட்பவியலாளர் **IT Technician**

தகுதியானவர்கள் 06.06.2022 (திங்கட்கிழமை) முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## TECHNO WORLD

**தொழில்நுட்பக் கல்லூரி**
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)

**புதிய பிரிவு ஆரம்பம்: 2024**
திகதி : 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 09.00 a.m

**பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மாத்திரம் கொண்ட ஆசிரியர் குழாம்**

| | |
|---|---|
| தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் | - ராகவன் (B.Sc)<br>முருகநிரோஜன் (B.Sc)<br>நிரோஜன் (B.Sc)<br>அச்சுதன் (B.Sc) |
| பொறியியல் தொழில்நுட்பம் | - அருண்குமார் (B.Tech Hons (Eng)<br>சிவஜன் (Lecturer)<br>நிசாந்தன் (HNDE) |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | - திருக்குமரன் (B.Sc in Agri )<br>நிரோஜன் (B.Sc in Agri)<br>சிவகுமார் (B.Sc in Agri) |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | - உமாகாந்தன் (BIT)<br>நயன் B. Sc) |
| விவசாய விஞ்ஞானம் | - சாரங்கன் (BSc in Agri)<br>திருக்குமரன் (B.Sc in Agri)<br>நிரோஜன் (B.Sc) |
| புவியியல் | - S.S. கோகில் (B.A, P.G.D.E, M.Ed) |
| ஊடகக்கற்கை | - கவிதரன் (B.A) |
| கணிதம் | - மோகன்ராஜ் (B.Sc) |
| சித்திரம் | - ஜெயந்தன் (BA) |

தொடர்புகளுக்கு : **077 017 5346**
(cr 36018) (2.6)

## NEW SCIENCE HALL

**KANNATHIDDY ROAD, JAFFNA**

# 2024 - A/L

## கணித உயிரியல் பிரிவு

**நேரடி வகுப்புக்கள், நிகழ்நிலை வகுப்புக்கள்**

**தமிழ் மொழிமூலம்**

**PHYSICS**
- திரு. G. பிரபா
- திரு. N. கபிலன்
- திரு. M. குகனேஸ்வரன்
- திரு . S.சோதிலிங்கம்

**CHEMISTRY**
- Mr. G. BENO
- Mr.T. சுசாந்தன்
- Mr.S.T. உமாசங்கர்

**BIOLOGY**
- திரு. V.S. குணசீலன்
- திரு. T. கெங்காதரன்
- திரு. K. இராகவன்

**COM. MATHS**
- திரு. P. செந்தில்நாதன்
- திரு. S. சிவகரன்

**ENGLISH MEDIUM**

**PHYSICS**
- MR. M. KUGANESWARAN

**CHEMISTRY**
- Mr.G.BENO

**BIOLOGY**
- MR. V.S. KUNASEELAN

**COM. MATHS**
- MR. P. SENTHILNATHAN
- MR. S. SIVAKARAN

**ஆரம்பம்: 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி**

தொடர்புகளுகளுக்கு: **077 791 7611,**
**076 569 3006, 076 566 3006**
(cr 36072) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.